# பெல்ஜிக் விசுவாச அறிக்கை

Belgic Confession of Faith
Tamil

Translated and distributed by

Georgetown PRC Hudsonville, MI

Translated in Tamil by :

Arul Sathiyan and Isaac Gajendran

Visit: www.fivesolasindia.com

## பெல்ஜிக் விசுவாச அறிக்கை

### 1618 மற்றும் 1619 – ஆம் ஆண்டுகளில் டார்ட்ரெச் (Dordecht) மாகாணத்தில் நிகழ்ந்த தேசிய மாநாட்டில் திருத்தம் செய்யப்பட்டது.

நெதர்லாந்து சீர்திருத்த சபைகளின் கோட்பாட்டு நியம தரநிலைகளில் மிகப் பழைமை வாய்ந்தது என்று எல்லாராலும் பொதுவாக அறியப்படுகிற அறிக்கை பெல்ஜிக் விசுவாச அறிக்கை (Belgic Confession) ஆகும். இது பதினேழாம் நூற்றாண்டின் லத்தீன் பெயராகிய கன்ஃபெசியோ பெல்ஜிகாவைத் (Confessio Belgica) தொடர்ந்து வருகிறது. பெல்ஜிகா என்ற வார்த்தை தாழ்நிலங்கள் அல்லது வடக்கு மற்றும் தெற்கு பகுதிகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய நெதர்லாந்து முழுவதையும் குறிக்கிறது. இது இன்று நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பெல்ஜிக் அறிக்கையின் வேறுசில பெயர்களில் வாலூன் அறிக்கை (Walloon Confession) மற்றும் நெதர்லாந்து அறிக்கை (Netherlands Confession) ஆகியவையும் அடங்கும்.

இந்த அறிக்கையின் முதன்மை ஆசிரியர் கைடோ டி ப்ரேஸ் (Guido de Brès, 1522–1567) ஆவார். இவர் சீர்திருத்தப் போதனைகளை ஊர் ஊராகச் சென்று பிரசங்கித்த ஒரு தேவபக்தியுள்ள போதகர். பதினாறாம் நூற்றாண்டு காலங்களில், ரோமன் கத்தோலிக்க சபையோடு நட்புறவில் இருந்த ஸ்பெயின் நாட்டின் 2-ஆம் பிலிப் என்ற அரசன் மூலமாக நெதர்லாந்தில் இருந்த சீர்திருத்த சபைகள், கடுமையான துன்புறுத்தல்களுக்கு உள்ளாயின. தாழ்நிலப்பகுதிகளில் (நெதர்லாந்து) சிலுவைக்குக் கீழுள்ள சபைகள் என்று அழைக்கப்பட்ட துன்புறுத்தப்பட்ட சீர்திருத்தசபை விசுவாசிகளின் கோட்பாடுகளை ஆதரித்து வாதாடும் வகையில், டி ப்ரேஸ் இந்த அறிக்கையை பிரெஞ்சு மொழியில் 1561-இல் தயாரித்தார். சீர்திருத்த விசுவாசத்தைப் பின்பற்றுபவர்கள் கிளர்ச்சியாளர்கள் என்று அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் உண்மையில்லை எனவும், மாறாக அவர்கள் வேதக் கோட்பாடுகளை மட்டுமே எடுத்துக்கூறும் சட்டத்தை மதிக்கும் நல்ல குடிமக்கள் என்பதை நிரூபித்துக்காட்ட டி ப்ரேஸ் தன்னுடைய சக போதகர்களால் உதவப்பட்டு, இந்த அறிக்கையை இயற்றினார். இந்த அறிக்கையானது, 1559-ம் ஆண்டின் ஒரு பிரெஞ்சு சீர்திருத்த அறிக்கையான காலிக் அறிக்கையை (Gallic Confession) தழுவி இயற்றப்பட்டிருந்தாலும், இது ஒரு சுயாதீனமான தொகுப்பாக எழுதப்பட்டது. அந்த காலிக் அறிக்கையானது ஜான் கால்வினின் வடிவமைப்பை சார்ந்து இயற்றப்பட்டது. அடிப்படையில், இந்த விசுவாச அறிக்கையானது சீர்திருத்த சபையின் இறையியல் கோட்பாடுகளை ஆறு முக்கியமானத் தலைப்புகளில் பாரம்பரிய முறையில்

இயற்றப்பட்டிருக்கிறது. அவைகளாவன: தேவனைப் பற்றிய கோட்பாடுகள் (முறையான இறையியல்/Theology Proper, அதிகாரம் 1-11), மனிதனைப் பற்றிய கோட்பாடுகள் (மனிதயியல்/Anthropology அதிகாரம் 12-15), கிறிஸ்துவைப் பற்றிய கோட்பாடுகள் (கிறிஸ்துயியல்/Christology, அதிகாரம் 16-21), இரட்சிப்பைப் பற்றிய கோட்பாடுகள் (Soterilogy, அதிகாரம் 22-26), சபையைப் பற்றிய கோட்பாடுகள் (Ecclesiology, அதிகாரம் 27-35), கடைசி காலங்களைப் பற்றிய கோட்பாடுகள் (Eschatology, அதிகாரம் 37) மற்றும் குடிமக்களை வழிநடத்தும் அரசாங்கம் எப்படி தேவ ராஜ்ஜியத்தின் தன்மையில் இருக்கவேண்டுமென்று அதிகாரம் 36 விளக்குகிறது. இந்த விசுவாச அறிக்கை பெரும்பாலும் மெய்யான உபதேச கண்ணோட்டத்தையே வலியுறுத்தி கிரமமாக கையாண்டாலும், "நாம்" என்ற பதத்தை அடிக்கடி பயன்படுத்துவதால் தனிப்பட்ட இணக்கமான அனுபவங்களுக்கு புத்துயிர் கொடுப்பதையும் காணமுடிகிறது

அடுத்த ஆண்டு, 1562-ல், 2-ஆம் பிலிப் மன்னருக்கு இந்த விசுவாச அறிக்கையின் ஒரு நகல் அனுப்பப்பட்டது. அதில் அனைத்து சட்டபூர்வமான விஷயங்களிலும் அரசாங்கத்திற்குக் அவர்கள் கீழ்ப்படியத் தயாராக இருப்பதாக அறிவித்தனர். ஆனால் அதே நேரத்தில், இந்த விசுவாச அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்களை நிராகரிப்பதைக் காட்டிலும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அவருடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, தங்களை வெறுக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர்களாய், அவர்கள் தங்கள் முதுகை பதவிகளுக்கும், அவர்களுடைய நாக்குகளை கத்திகளுக்கும், அவர்களுடைய வாய்களை இறுகக் கட்டுவதற்கும், அவர்களுடைய முழு உடலையும் அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுக்கவும் தயாராக இருப்பதாக அறிவித்தனர். எவ்வாறாயினும், விசுவாச அறிக்கையோ அல்லது அவர்களது மனுவோ ஸ்பெயினின் அதிகாரிகளுடன் புரட்சியாளர்கள் (புராட்டஸ்டண்டுகள்) விரும்பிய சகிப்புத்தன்மையின் பலனைத் தரவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு டி ப்ரேஸும் இரத்த சாட்சிகளாய் மரித்த ஆயிரக்கணக்கானோரில் ஒருவராகி, தனது விசுவாசத்தை அவருடைய இரத்தத்தால் முத்திரையிட்டார். ஆயினும்கூட, சீர்திருத்தக் கோட்பாட்டின் விலைமதிப்பற்ற அடையாள அறிக்கையாக இன்றும் நிலைத்திருக்கும் இந்த விலையேறப்பெற்ற கோட்பாட்டுத் நியமத்தின் மூலம் அவரது பணி தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருக்கும்.

பெல்ஜிக் விசுவாச அறிக்கையானது 1562-ல் டச்சு (Dutch) மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர் நெதர்லாந்திலுள்ள சீர்திருத்த சபைகளால் தயக்கமின்றி உடனடியாகப் பெறப்பட்டது. பிறகு 1566-ஆம் ஆண்டில் ஆண்ட்வெர்ப் மாநாடு (Synod of Antwerp) மூலம் இது திருத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பதினாறாம் நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகளில் நடைபெற்ற

தேசிய டச்சு மாநாடுகளில் (National Dutch Synods) தொடர்ந்து இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையின் மேலும் சில திருத்தங்களுக்குப் பிறகு, டார்ட் மாநாடு (Synod of Dort, 1618-1619) இதை சீர்திருத்த சபைகளில் உள்ள அனைத்து சபை பணியாளர்களும் ஒப்புக்கொள்ள வேண்டிய கோட்பாட்டுத் தரங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

## அதிகாரம் 1

## ஒரே தேவன்

ஒன்றான[1] மற்றும் ஆவிக்குரிய[2] ஒரே தேவன் இருக்கிறார் என்பதை நாங்கள் அனைவரும் இருதயத்தோடு விசுவாசித்து, வாயினால் அறிக்கைபண்ணுகிறோம்; மேலும் அவர் நித்தியமானவராகவும்,[3] புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டவராகவும்,[4] காணக்கூடாதவராகவும்,[5] மாறாதவராகவும்,[6] எல்லையற்றவராகவும்,[7] சர்வ வல்லமையுடையவராகவும், ஞானத்தில் மிகச் சிறந்தவராகவும்,[8] நீதியுள்ளவராகவும்,[9] நன்மையுள்ளவராகவும்,[10] மற்றும் எல்லா நன்மைகளும் நிரம்பி வழிகிற ஊற்றாகவும்[11] இருக்கிறார்.

[1] **எபே** 4:6; **உபா** 6:4; 1 **தீமோ** 2:5; 1 **கொரி** 8:6

[2] **யோவான்** 4:24

[3] **ஏசா** 40:28

[4] **ரோமர்** 11:33

[5] **ரோமர்** 1:20

[6] **மல்** 3:6

[7] **ஏசா** 44:6

[8] 1 **தீமோ** 1:17

[9] **எரே** 12:1

[10] **மத்** 19:17

[11] **யாக்** 1:17; 1 **நாளா** 29:10-12

---

## அதிகாரம் 2

## தேவன் தம்மை எவ்விதம் நமக்கு வெளிப்படுத்துகிறார்

நாம் தேவனை இரண்டு வழிகளில் அறிகிறோம்: முதலாவதாக, நமது கண்களுக்கு முன்பாக மிகவும் நேர்த்தியான ஒரு புத்தகமாக இருக்கக்கூடிய படைப்பு, பராமரிப்பு மற்றும் இப்பிரபஞ்சத்தின் ஆளுகையினால்[1] நாம் அவரை

அறிகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதைப்போல (ரோமர் 1:20), இப்பிரபஞ்சத்திலுள்ள பெரிய, சிறிய மற்றும் எல்லா படைப்புயிரினங்களும் தேவனுடைய காணப்படாதவைகளாகிய நித்திய வல்லமை மற்றும் தேவத்துவம் என்பவைகளைக் குறித்து நம்மை சிந்திக்க வழிநடத்தும் கதாப்பாத்திரங்களாக இருக்கின்றன. இவைகள் யாவும் தேவனுடைய இருத்தலைக் குறித்து மனிதர்களை நம்பச்செய்வதற்கு போதுமானதாக இருக்கிறபடியினால், அவர்களை போக்குச்சொல்ல இயலாதவர்களாக மாற்றுகின்றன.

இரண்டாவதாக, அவர் தம்முடைய பரிசுத்தமான மற்றும் தெய்வீக வார்த்தையினால்[2] தம்மை நமக்கு மேலும் தெளிவாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்துகிறார்; அதாவது, இந்த வாழ்க்கையில் அவருடைய மகிமைக்காகவும், நம்முடைய இரட்சிப்பிற்காகவும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமான அளவிற்கு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார்.

[1] **சங்** 19:1–2; **எபே** 4:6

[2] **சங்** 19:7–8; 1 **கொரி** 12:6

---

**அதிகாரம் 3**

**தேவனின் எழுதப்பட்ட வார்த்தை**

அப்போஸ்தலனாகிய பேதுரு கூறியதைப்போல, தேவனின் இந்த வார்த்தையானது மனுஷருடைய சித்தத்தினால் அனுப்பப்படவும் இல்லை, வழங்கப்படவும் இல்லை. மாறாக, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் என்று நாங்கள் அறிக்கையிடுகிறோம்.[1] அதன்பிறகு, தேவன் நம்மீதும் நம்முடைய இரட்சிப்பின் மீதும் வைத்திருக்கும் ஒரு சிறப்பான அக்கறையினால், அவருடைய வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையை எழுத்துவடிவில் கொண்டுவருமாறு தம்முடைய ஊழியர்களான தீர்க்கதரிசிகள்[2] மற்றும் அப்போஸ்தலர்களுக்குக்[3] கட்டளையிட்டார். மேலும் நியாயப்பிரமாணத்தின் இரண்டு கற்பலகைகளையும் தன்னுடைய சொந்த விரலினால் அவரே எழுதினார்.[4] ஆதலால் இந்த எழுதப்பட்ட ஆவணத்தை நாம் பரிசுத்த மற்றும் தெய்வீக வேதாகமம் என்று அழைக்கிறோம்.

[1] 2 **பேது** 1:21

[2] **யாத்** 24:4; **சங்** 102:18; **ஆப** 2:2

[3] 2 **தீமோ** 3:16; **வெளி** 1:11

[4] **யாத்** 31:18

---

## அதிகாரம் 4

## பரிசுத்த வேதாகமத்தின் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்கள்

பரிசுத்த வேதாகமமானது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என இரண்டு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இது அங்கீகரிக்கப்பட்டதாகவும், அதற்கு எதிராக குற்றம் சாட்டப்படாததுமாய் இருக்கிறது என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். தேவனுடைய சபையில் அப்புத்தகங்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் இவ்வாறாக பட்டியலிடப்படுகின்றன: மோசேயின் ஐந்தாகமங்களாகிய, ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்; யோசுவாவின் புத்தகம், நியாயாதிபதிகள், ரூத், சாமுவேலின் இரண்டு புத்தகங்கள், இராஜாக்களின் இரண்டு புத்தகங்கள், நாளாகமத்தின் இரண்டு புத்தகங்கள் (பாராலிபோமினன் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது), எஸ்றா, நெகேமியா, எஸ்தர், யோபு, தாவீதின் சங்கீதங்கள், சாலொமோனின் மூன்று புத்தகங்களாகிய நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு; பெரிய தீர்க்கதரிசிகளாகிய ஏசாயா, எரேமியா, [மற்றும் புலம்பல்], எசேக்கியேல் மற்றும் தானியேல்; மற்றும் பன்னிரெண்டு சிறிய தீர்க்கதரிசிகளாகிய ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா மற்றும் மல்கியா.

புதிய ஏற்பாட்டு புத்தகங்களாவன: நான்கு சுவிசேஷ நூல்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான்; அப்போஸ்தலருடைய நடபடிகள்; அப்போஸ்தலன் பவுலின் பதினான்கு நிருபங்களாகிய ரோமர், கொரிந்தியருக்கு எழுதின இரண்டு நிருபங்கள், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டு நிருபங்கள், தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டு நிருபங்கள், தீத்து, பிலேமோன், எபிரேயர்; மற்ற அப்போஸ்தலர்களின் ஏழு நிருபங்களாகிய யாக்கோபு, பேதுரு எழுதின இரண்டு நிருபங்கள், யோவான் எழுதின மூன்று நிருபங்கள், யூதா மற்றும் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்.

---

## அதிகாரம் 5

## பரிசுத்த வேதாகமம் அதன் தனித்துவத்தையும் அதிகாரத்தையும் எங்கிருந்து பெறுகிறது

நமது விசுவாசத்தின் ஒழுங்குபாட்டிற்கும், அஸ்திபாரத்திற்கும் மற்றும் அதன் உறுதிப்பாட்டிற்கும் தேவையான பரிசுத்தமான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இந்தப்

புத்தகங்கள் அனைத்தையும், மற்றும் இவற்றை மட்டுமே நாம் ஏற்றுக்கொள்கிறோம். இப்புத்தகங்களை சபை பெற்று, அவற்றிற்கு ஒப்புதல் அளிக்கிறது என்பதற்காக அல்லாமல், இவைகள் யாவும் தேவனிடத்திலிருந்து வருகிறது என்றும், அதன் ஆதாரங்களை அவைகள் தங்களுக்குள்ளே கொண்டிருக்கிறது என்றும் பரிசுத்த ஆவியானவர்தாமே நமது இருதயத்தில் சாட்சியிடுகிறபடியால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள எல்லாவற்றையும் நாம் சந்தேகத்துக்கிடமின்றி விசுவாசிக்கிறோம். ஏனென்றால் இவ்வேதத்தில் முன்னறிவிக்கப்பட்ட காரியங்கள் நிச்சயமாக நடப்பதை குருடர்கள்கூட உணர்ந்துகொள்கிறார்களே.

---

## அதிகாரம் 6

## அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களுக்கும் தள்ளுபடி புத்தகங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு

மேற்கூறப்பட்டுள்ள தொகுப்பட்ட பரிசுத்தப் புத்தகங்களை தள்ளுபடிப் புத்தகங்களாகிய தோபித்து, யூதித்து, எஸ்தர் (கிரேக்கம்), சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாரூக்கு, தானியேல் புத்தகத்தின் இணைப்புகளாகிய நெருப்பு சூளையிலிருந்து இளைஞர் மூவரின் பாடல், சூசன்னாவின் சரித்திரம், பேல் தெய்வமும் அரக்கப்பாம்பும், மனாசேயின் ஜெபம் மற்றும் மக்கபேயரின் இரண்டு நூல்கள் ஆகியவற்றிலிருந்து நாம் வேறுபடுத்துகிறோம். இவைகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களோடு உடன்படும் வரையில் சபையானது அதைப் படித்து, அதிலிருந்து கற்றுக்கொள்ளலாம். ஆனால் இவற்றின் சாட்சியிலிருந்து நம்முடைய விசுவாசத்தின் ஒரு சிறு பகுதியை வலுப்படுத்தவோ அல்லது கிறிஸ்தவ மதத்தின் எந்தவொரு காரியத்தையும் நாம் உறுதிப்படுத்தமுடியும் என்ற அளவிற்கு அவைகள் அத்தகைய அதிகாரத்தையும் செயல்திறனையும் தங்களில் கொண்டிருப்பதில்லையென்று தெளிவாக அறிந்துகொள்கிறோம். மற்ற பரிசுத்தப் புத்தகங்களின் அதிகாரத்திலிருந்து அவைகள் மிகவும் தரம் குறைந்ததாய் உள்ளன.

---

## அதிகாரம் 7

## விசுவாசத்திற்கான ஒரே நியதியாய் இருக்கும்படியான பரிசுத்த வேதாகமத்தின் போதுமானத்தன்மை

இந்த பரிசுத்த வேதாகமமானது தேவனுடைய சித்தத்தை தன்னில் உள்ளடக்கியிருந்து, இரட்சிப்படைய ஒரு மனிதன் விசுவாசிக்க வேண்டிய சகல

காரியங்களையும் போதிப்பதற்கு போதுமானதாய் இருக்கிறது[1] என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். ஏனெனில் தேவனை நாம் எப்படி ஆராதிக்கவேண்டுமென்று நம்மிடத்தில் அவர் எதிர்பார்க்கின்றாரோ அவையனைத்தும் இந்த வேதத்தில் விரிவான முறையில் எழுதப்பட்டுள்ளது. யாராவது, அது ஒரு அப்போஸ்தலனாக இருந்தாலும் கூட, அல்லது பவுல் கூறுவதைபோல, வானத்திலிருந்து வருகிற தூதனாக இருந்தாலும் கூட,[2] நாம் இன்றைக்கு பரிசுத்த வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ளதற்கு மாறாக[3] போதிப்பது நியாயமற்றதாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையோடே ஒன்றை கூட்டுவதும் அல்லது அதிலிருந்து ஒன்றை குறைப்பதும்[4] தடைசெய்யப்பட்டிருக்கிறபடியால், அதன் கோட்பாடுகள் எல்லா வகையிலும் மிகச் சரியானதும் மற்றும் முழுமையானதாகவும் இருக்கிறது என்பது இதன் மூலம் தெள்ளத் தெளிவாகிறது.

மனிதர்களின் எந்தவொரு இலக்கியப் படைப்புக்களையும், அவர்கள் எவ்வளவு பரிசுத்தமானவர்களாக வாழ்ந்திருந்தாலும் அவற்றை தெய்வீக வேத வார்த்தைகளோடு[5] சம மதிப்புடையதாக நாம் ஏற்றுக்கொள்வதில்லை; அதுமட்டுமல்லாமல் சடங்காச்சாரியங்களையோ, பெருக்கூட்ட ஜனங்களையோ, பழங்காலத்தையோ, அதில் வாழ்ந்து சுதந்தரித்து மரித்த பெரும் மனிதர்களையோ, மாநாடுகளையோ, ஆணைகளையோ, அல்லது சட்ட விதிமுறைகளையோ தேவனுடைய சத்தியத்தோடு[6] சம அதிகாரம் உடையதாய் ஒருபோதும் ஆக்குவது கிடையாது. ஏனெனில் சத்தியமானது இவையெல்லாவற்றிற்கும் மேலானது; மனிதர்கள் யாவரும் தங்களில் தாங்களே பொய்யராய்[7] இருக்கின்றனர், மாயையைக் காட்டிலும் வீணானவர்களாய் இருக்கின்றனர். ஆகவே "அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்;"[8] மேலும் ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்"[9] என்று அப்போஸ்தலர்கள் போதித்ததைப் போல, இந்த தவறா நிலையுடைய வேதாகமத்தோடு[10] ஒத்துப்போகாத எந்தவொரு காரியத்தையும் நாங்கள் எங்களது முழு இருதயத்தோடும் நிராகரிக்கிறோம்.

[1] **ரோமர்** 15:4; **யோவான்** 4:25; 2 **தீமோ** 3:15-17; 1 **பேது** 1:2; **நீதி** 30:5; **வெளி** 22:18; **யோவான்** 15:15; **அப்** 2:27

[2] **கலா** 1:8-9; 1 **கொரி** 15:2; **அப்** 26:22-23; **ரோமர்** 15:4; 1 **பேது** 4:11; 2 **தீமோ** 3:14

[3] 1 **பேது** 4:11; 1 **கொரி** 15:2-3; 2 **தீமோ** 3:14; 1 **தீமோ** 1:3; 2 **யோவான்** 10

[4] **உபா** 12:32; **நீதி** 30:6; **வெளி** 22:18; **யோவான்** 4:25

[5] மத் 15:3; 17:5; மாற் 7:7; ஏசா 1:12; 1 கொரி 2:4

[6] ஏசா 1:12; ரோமர் 3:4; 2 தீமோ 4:3-4

[7] சங் 62:9

[8] 1 யோவான் 4:1

[9] 2 யோவான் 10

[10] கலா 6:16; 1 கொரி 3:11; 2 தெச 2:2

---

## அதிகாரம் 8

## தேவன் தன்னுடைய இருத்தலில் ஒருவராகவும், ஆள்தத்துவத்தில் மூவராகவும் இருக்கின்றார்

இந்த சத்தியம் மற்றும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில், நாங்கள் ஒன்றான ஒரே தேவனை விசுவாசிக்கின்றோம். அவர் தன்னுடைய இருத்தலில் ஒருவராகவும்,[1] ஆள்தத்துவத்தில் மூவராகவும்[2] இருக்கின்றார். உண்மையாக, மெய்யாக, நித்தியமாக தங்களுடைய பகிர்ந்தளிக்கமுடியாத குணாதிசயங்களிலே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்[3] என அவர் திரியேக தேவனாக இருக்கிறார். காணக்கூடிய மற்றும் காணமுடியாத சகல காரியங்களின் மூலாதாராத்திற்கும், தோற்றத்திற்கும் காரணக்கர்த்தாவாக பிதா இருக்கிறார்.[4] குமாரன் வார்த்தையாகவும்,[5] ஞானமாகவும்,[6] பிதாவினது தற்சுரூபமாவாகவும்[7] இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனிடமிருந்து புறப்பட்டு வருகின்ற[8] நித்தியமான வல்லமையும் ஆற்றலுமாய்[9] இருக்கிறார். பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவரும் தங்களுடைய செயல்களின் அடிப்படையில் தங்களுடைய ஆள்தத்துவங்களைக் கொண்டிருக்கின்றனர் என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறபடியினால், இந்த வேறுபாடுகளால் தேவன் மூன்று தனி நபர்களாக பிரிக்கப்படுவதில்லை. ஆனால், இந்த மூன்று ஆளத்துவங்களையும் கொண்ட ஒரே தேவனாக அவர் இருக்கிறார். ஆகவே, பிதா குமாரன் அல்ல, குமாரனும் பிதா அல்ல, அதேபோல பரிசுத்த ஆவியானவரும் பிதாவுமல்ல, குமாரனுமல்ல. இப்படியாக ஆளத்துவங்களினால் வேறுபட்டிருந்தாலும், ஒரு தன்மை இன்னொரு தன்மையாக பிரிந்துபோகாமலும், அவைகள் ஒன்றோடொன்று கலந்துவிடாமலும் தேவன் இருக்கிறார். ஏனென்றால், பிதா ஒருபோதும் மாம்சத்தை எடுக்கவில்லை, பரிசுத்த ஆவியானவரும் மாம்சத்தை எடுக்கவில்லை. கிறிஸ்து மட்டுமே மாம்ச சாயலானார்.[10] பிதாவானவர் அவருடைய குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் ஒருபோதும் இருந்ததில்லை. ஏனென்றால் அவர்கள் ஒன்றாக நித்தியமானவர்களும், ஒருங்கிணைந்தவர்களுமாகவும் இருக்கின்றனர்.

அவர்களில் முதலும் இல்லை, கடைசியும் இல்லை. சத்தியம், வல்லமை, நன்மை மற்றும் இரக்கம் ஆகிய அனைத்திலும் மூவரும் ஒருவராகவே இருக்கின்றனர்.

1 **ஏசா** 43:10

2 1 **யோவான்** 5:7; **எபி** 1:3

3 **மத்** 28:19

4 1 **கொரி** 8:6; **கொலோ** 1:16

5 **யோவான்** 1:1, 2; **வெளி** 19:13; **நீதி** 8:12

6 **நீதி** 8:12, 22

7 **கொலோ** 1:15; **எபி** 1:3

8 **யோவான்** 15:26; **கலா** 4:6

9 **மத்** 12:28

10 **பிலி** 2:6, 7; **கலா** 4:4; **யோவான்** 1:14

---

## அதிகாரம் 9

## முந்தைய அதிகாரத்தில் சொல்லப்பட்ட தேவனுடைய திரித்துவத்திற்கானச் சான்று

பரிசுத்த வேதாகமத்தின் சாட்சியிலிருந்தும், குறிப்பாக நமக்குள்ளாக நாம் உணரும் அந்த நபர்களின் செயல்பாட்டின் விளைவுகளிலிருந்தும் திரித்துவத்தைக் குறித்து நாம் அறிகிறோம். இந்த பரிசுத்த திரித்துவத்தை விசுவாசிக்கும்படி நமக்கு கற்பிக்கும் பரிசுத்த வேதாகமத்தின் சாட்சிகள் பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில் எழுதப்பட்டிருந்தாலும் அவற்றை நாம் ஒவ்வொன்றாக விவரிக்கத் தேவையில்லை, ஆனால் விவேகத்துடனும் பகுத்தறிவோடும் சில சாட்சிகளை (வசனங்களை) தெரிந்தெடுத்திருக்கிறோம். ஆதியாகமம் 1:26, 27 ஆகிய வசனங்களில், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று தேவன் கூறுகிறார். "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்."[1] ஆதியாகமம் 3:22-ல், "பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்;"[2] என்று கூறுகிறார். "மனுஷனை உண்டாக்குவோமாக" என்ற இந்த வாக்கியத்திலிருந்து தேவத்துவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இருக்கின்றார்கள் என்பது தெரிகிறது. "தேவன் சிருஷ்டித்தார்" என்று அவர் கூறும்போது, அவர்களுக்கிடையேயான ஒற்றுமை அங்குக்

காட்டப்படுகிறது. எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்று அவர் சொல்லவில்லை என்பது உண்மையாக இருந்தாலும், பழைய ஏற்பாட்டில் ஓரளவு தெளிவற்றதாக நமக்குத் தோன்றும் இந்தக் காரியம் புதிய ஏற்பாட்டில் மிகவும் தெளிவாக உள்ளது.

நமது ஆண்டவர் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றபோது,[3] "இவர் என்னுடைய நேசகுமாரன்" என்று பேசின பிதாவினது சத்தம் கேட்கப்பட்டது. அப்போது குமாரன் யோர்தான் நதியில் இருந்தார், பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் காணப்பட்டார். சகல விசுவாசிகளுடைய ஞானஸ்நானத்திலும் இதே முறையை கிறிஸ்து நிறுவியிருக்கிறார்: "சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து…"[4] லூக்கா எழுதின சுவிசேஷத்தில் காபிரியேல் தூதன் நம் ஆண்டவரின் தாயாராகிய மரியாளிடம் "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்"[5] என்று கூறினான். அதேபோல, இன்னோரு இடத்தில் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக"[6] என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும் "(பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்)."[7] இந்த எல்லாப் பகுதிகளிலேயும் ஒரே தெய்வீக இருத்தலில் மூன்று நபர்கள் இருக்கின்றார்கள் என்று நாம் போதிக்கப்படுகிறோம். இந்தக் கோட்பாடானது மனிதனுடைய புரிந்துகொள்ளுதலுக்கு மிஞ்சினதாய் இருந்தாலும், தேவனுடைய வார்த்தையின் மூலம் நாங்கள் இதை இப்போது விசுவாசிக்கிறோம். இதன்பிறகு பரலோகத்தில் இதைக் குறித்த பூரண அறிவிலும், ஆசீர்வாதத்திலும் களிகூறுவோமென எதிர்பார்க்கிறோம்.[8]

மேலும், இந்த மூன்று நபர்களின் குறிப்பிட்ட பணிகள் மற்றும் செயல்பாடுகளை நாம் கவனிக்க வேண்டும். பிதாவானவர் தம்முடைய வல்லமையினால் படைத்தவர்[9] என்று அழைக்கப்படுகிறார்; குமாரன் தன்னுடைய இரத்தத்தினால் நம்முடைய இரட்சகராகவும், மீட்பராகவும் இருக்கிறார்;[10] பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் தங்கி வாசம்பண்ணுகிறபடியால் நம்மைப் பரிசுத்தப்படுத்துபவராக இருக்கிறார். [11]

பரிசுத்த திரித்துவத்தைப் பற்றிய இந்த கோட்பாடு அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்து இன்றுவரை யூதர்கள், முகமதியர்கள், சில போலிக் கிறிஸ்தவர்கள் மற்றும் மார்சியன், மானேஸ், பிராக்சியாஸ், சபெலியஸ், சமோசடெனஸ் போன்ற துர் உபதேசிகளுக்கு எதிராக ஏரியஸ் மற்றும் சபை

முற்பிதாக்களால் நியாயமாகக் கண்டனம் செய்யப்பட்டு, மெய்யான சபையினால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆகையால், இந்தக் காரியத்தின் அடிப்படையில் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம், நிசேயா மற்றும் அத்தனேசியஸ் ஆகிய மூன்று விசுவாசப் பிரமாணங்களையும் நாங்கள் விரும்பி ஏற்றுக்கொள்கிறோம்; அத்துடன் இவற்றோடு இணக்கமானவை என முற்பிதாக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

[1] **ஆதி** 1:26, 27
[2] **ஆதி** 3:22
[3] **மத்** 3:16-17
4 **மத்** 28:19
5 **லூக்** 1:35
6 2 **கொரி** 13:14
7 1 **யோவான்** 5:7
8 **சங்** 45:8; **ஏசா** 61:1
9 **பிரசங்கி** 12:3; **மல்** 2:10; 1 **பேது** 1:2
10 1 **பேது** 1:2; 1 **யோவா** 1:7; 4:14
11 1 **கொரி** 6:11; 1 **பேது** 1:2; **கலா** 4:6; **தீத்** 3:5; **ரோமர்** 8:9; **யோவான்** 14:16-17

---

## அதிகாரம் 10

## மெய்யான மற்றும் நித்தியமான தேவனாகிய இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்து அவருடைய தெய்வீக இயல்புக்கு ஏற்ப, நித்தியமாக[1], தேவனுடைய ஒரேபேறான குமாரனாக[2] இருக்கிறார் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர் ஜென்மிக்கப்படாமலும், படைக்கப்படாமலுமிருந்து (படைக்கப்பட்டிருந்தால் அவர் ஒரு படைப்பாக இருந்திருப்பார்), பிதாவோடு உடனொத்து ஒன்றிணைந்தவராகவும்,[3] அவரோடு நித்தியமானவராகவும்;[4] அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாய்;[5] எல்லாவற்றிலும் அவருக்கு சமமானவராய் இருக்கிறார்.[6] பின்வரும் சாட்சிகளை நாம் ஒன்றாகப் பார்க்கும்போது அவைகள் நமக்குப் போதிக்கிற பிரகாரம், நம்முடைய மாம்ச சாயலை ஏற்றுக்கொண்ட காலத்திலிருந்து மட்டும் கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இல்லாமல், நித்தியத்திலிருந்து[7] அவருடைய குமாரனாக இருக்கிறார். தேவன் உலகத்தை சிருஷ்டித்தார் என்று மோசே கூறுகிறார்;[8] யோவான் "சகலமும்

வார்த்தையினாலே உண்டாயிற்று” என்று கூறி, அந்த வார்த்தையை தேவன் என்று அழைக்கிறார்.[9] தேவன் தன்னுடையக் குமாரனைக்கொண்டு உலகங்களை உண்டாக்கினார்[10] என்றும், இயேசு கிறிஸ்துவைக் கொண்டே தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தார்[11] என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். ஆதலால், தேவன், வார்த்தை, குமாரன் மற்றும் இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட அவர், அவரால் சகலமும் படைக்கப்பட்ட காலத்தின்போது இருந்தார்[12] என்பது அறியப்படவேண்டும். ஆகையால் மீகா தீர்க்கதரிசி கூறுகிறார்: அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது.[13] மேலும் அப்போஸ்தலர் கூறுகிறார்: இவர் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவும் இல்லாதவர்...”[14] ஆகவே நாம் வணங்கி, ஆராதித்து, ஊழியம்புரியும் அவர் (கிறிஸ்து), மெய்யான, நித்திய மற்றும் சர்வ வல்லமையுள்ள தேவனாக இருக்கிறார்.

1 **யோவான்** 1:14; **கொலோ** 1:15
2 **யோவான்** 1:18, 49
3 **யோவான்** 10:30; **பிலி** 2:6
4 **யோவான்** 1:2; 17:5; **வெளி** 1:8
5 **எபி** 1:3
6 **பிலி** 2:6
7 **யோவான்** 8:23, 58; 9:35-37; **அப்** 8:37; **ரோமர்** 9:5
8 **ஆதி** 1:1
9 **யோவான்** 1:3
10 **எபி** 1:2
11 **கொலோ** 1:16
12 **கொலோ** 1:16
13 **மீகா** 5:2
14 **எபி** 7:3

---

## அதிகாரம் 11

## மெய்யான மற்றும் நித்தியமான தேவனாகிய பரிசுத்த ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவர் பிதாவினிடமிருந்தும்,[1] குமாரனிடமிருந்தும்[2] நித்தியமாய் புறப்படுகிறவராய் இருக்கிறார் என்பதை நாங்கள் விசுவாசித்து அறிக்கையிடுகிறோம். உருவாக்கப்படாமலும், சிருஷ்டிக்கப்படாமலும், ஒரேபேறான குமாரனாகவுமில்லாமல் பிதா மற்றும் குமாரனிடமிருந்து புறப்படுகிறவராய் இருக்கிற இந்த பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பரிசுத்த திரித்துவத்தில் மூன்றாவது நபராக இருக்கிறார். இருத்தலிலும் (உள்ளியல்பு),

மாட்சிமையிலும் மற்றும் மகிமையிலும் பிதாவோடும் குமாரனோடும் ஒன்றாக இருக்கின்றார். ஆகவே வேதாகமம் நமக்குப் போதிக்கிறபடி,[3] அவர் மெய்யான மற்றும் நித்தியமான தேவனாக இருக்கிறார்.

[1] **சங்** 33:6, 17; **யோவான்** 14:16

[2] **கலா** 4:6; **ரோமர்** 8:9; **யோவான்** 15:26

[3] **ஆதி** 1:2; **ஏசா** 48:16; 61:1; **அப்** 5:3-4; 28:25; 1 **கொரி** 3:16; 6:19; **சங்** 139:7

---

## அதிகாரம் 12

## படைப்பு

பிதாவானவர், வார்த்தையினால், அதாவது, அவருடைய குமாரனால்[1] தம்முடைய விருப்பத்தின்படி வானத்தையும், பூமியையும் மற்ற எல்லாப் படைப்புகளையும் ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்து, அவையெல்லாவற்றிற்கும் உள்ளியல்பையும், வடிவையும், தோற்றத்தையும், தங்களைப் படைத்தவருக்கு பணிபுரியும் பொருட்டு வெவ்வேறு பணிகளையும் அளித்தார் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். மேலும் அவைகள் யாவும் மனிதனுக்கு பயன்படத்தக்கதாகவும்,[2] அதினால் மனிதன் தன்னைப் படைத்த தேவனுக்குப் பணிபுரியும்படியாகவும்,[3] அவர் தம்முடைய நித்தியமான தெய்வீக பராமரிப்பின் செயலினாலும், எல்லையற்ற வல்லமையினாலும்[4] அவை அனைத்தையும் தாங்கி இன்றும் ஆளுகை செய்கிறார்.

மேலும், தம்முடைய ஊழியர்களாகவும்,[5] அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு பணிபுரிகின்றவர்களாகவும்[6] இருக்கும்படியாக அவர் தூதர்களை நல்லவர்களாகப் படைத்தார்.[7] அவர்களில் சிலர், தேவன் அவர்களைப் படைத்த அந்த மாண்பிலிருந்து நித்திய அழிவிற்குள்ளாக விழுந்தனர்.[8] மற்ற தூதர்கள் தேவனுடைய கிருபையினால்[9] தங்களுடைய முன்பிருந்த அதே நிலையில் தொடர்ந்து நிலைத்திருக்கிறார்கள். பிசாசுகளும், தீய ஆவிகளும், தேவனுக்கும் சகல நன்மையான காரியங்களுக்கும் எதிராளிகளாக இருக்கின்ற மிக மோசமானவர்கள். சபையையும், அதின் அங்கத்தவர்கள் எல்லாரையும் தங்களுடைய துன்மார்க்கமான வியூகங்களினால் அழிக்கவும் கெடுக்கவும்[10] கொலைகாரனைப் போல தங்கள் முழு பெலத்தோடும்[11] அவர்கள் காத்திருக்கிறார்கள். ஆகையால், அவர்களுடைய துன்மார்க்கத்தால், நித்திய தண்டனைக்கு ஆளாக்கப்பட்டு, அவர்களின் கொடூரமான வேதனைகளை தினமும் எதிர்பார்த்துக் கிடக்கிறார்கள்.[12] ஆனபடியினால், ஆவிகள் மற்றும் தூதர்கள் இருப்பதை மறுக்கும் சதுசேயர்களின் பிழையை[13] நாங்கள் நிராகரித்து

வெறுக்கிறோம். மேலும் பிசாசுகள் தங்களைத் தாங்களே தோற்றுவித்தவர்கள் என்றும், அவர்களுடைய சுபாவ இயல்பே தீயது தான் என்றும், அவர்கள் ஒருபோதும் எவராலும் கறைபடியவில்லை என்றும் கூறும் தேவனும், சாத்தானும் சம ஆற்றலுடையவர்கள் என போதிக்கும் போலி உபதேசிகளான மனிச்சீயர்களையும் (Manichees) நாங்கள் நிராகரிக்கிறோம்.

[1] **ஆதி** 1:1; **ஏசா** 40:26; **எபி** 3:4; **வெளி** 4:11; 1 **கொரி** 8:6; **யோவான்** 1:3; **கொலோ** 1:16

[2] 1 **தீமோ** 4:3-4; **ஆதி** 1:29-30; 9:2-3; **சங்** 104:14-15

[3] 1 **கொரி** 3:22; 6:20; **மத்** 4:10

[4] **எபி** 1:3; **சங்** 104:10; **அப்** 17:25

[5] **சங்** 103:20; 34:7; 148:2

[6] **எபி** 1:14; **சங்** 34:7

[7] **கொலோ** 1:16

[8] **யோவான்** 8:44; 2 **பேது** 2:4; **லூக்** 8:31; **யூதா** 6

[9] **மத்** 25:31

[10] **ஆதி** 3:1; **மத்** 13:25; 2 **கொரி** 2:11; 11:3, 14

[11] 1 **பேது** 5:8; **யோபு** 1:7

[12] **மத்** 25:41; **லூக்** 8:30, 31

[13] **அப்** 23:8

---

## அதிகாரம் 13

## தெய்வீக பராமரிப்பு

இந்த தேவன் எல்லாவற்றையும் படைத்த பிறகு, அவற்றைக் கைவிட்டுவிடவுமில்லை, தங்களின் போக்கிற்கும், தற்செயலிற்கும் அல்லது அதிர்ஷ்டத்திற்கும் விட்டுக்கொடுக்கவுமில்லை. மாறாக, அவையனைத்தையும் தம்முடைய பரிசுத்த சித்தத்தின்படியே[1] அவர் ஆண்டு நடத்துகிறார். ஆகவே, அவருடைய தீர்மானமில்லாமல் இந்த உலகில் எதுவும் நடப்பதில்லை.[2] அதேவேளையில், அவர் பாவத்தின் காரணகர்த்தருமில்லை, அந்தப் பாவத்தை செய்பவர்களுக்குப் பொறுப்பானவரும் இல்லை. ஏனென்றால், அவருடைய வல்லமையும் நன்மையும் மிகப் பெரியதாகவும், புரிந்துகொள்ளுதற்கு அப்பாற்பட்டதாகவுமிருந்து, சாத்தானும் பொல்லாத மனிதர்களும் துன்மார்க்கமாக செயல்படும்போதும் கூட, அவர் தனது பணியை மிகச் சிறந்த மற்றும் நீதியான முறையில் கட்டளையிட்டு நிறைவேற்றுகிறார்.[3] மனித அறிவை மிஞ்சக்கூடிய மற்றும் நம்முடைய புரிந்துகொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்ட வகையில் தேவன் என்ன செய்கிறார் என்பதில் தேவையற்ற ஆர்வத்துடன் நாங்கள் ஆராய்ச்சி

செய்வதில்லை. ஆனால் மிகுந்த மனத்தாழ்மையுடனும், பயபக்தியுடனும் நம்மிடமிருந்து மறைக்கப்பட்டுள்ள[4] தேவனின் நீதியான நியாயத்தீர்ப்புகளை போற்றி, இந்த வரம்புகளை மீறாமல், அவர் தம்முடைய வார்த்தையில் நமக்கு வெளிப்படுத்தியவற்றை மட்டுமே கற்றுக்கொள்ள வேண்டிய கிறிஸ்துவின் சீஷர்களாக நாம் இருக்கிறோம் என்பதில் திருப்தியடைகிறோம்.

இவ்வுலகில் எதுவும் தற்செயலாக நமக்கு ஏற்படாமல், ஒரு தகப்பனுக்குரிய அக்கறையுடன் நம்மைக் கவனித்து, எல்லா படைப்புகளையும் தம்முடைய வல்லமையின் கீழ் வைத்திருக்கிற[5] நம்முடைய கிருபையுள்ள பரலோகத் தகப்பனின் வழிகாட்டுதலின்படியே நடக்கிறது என்று இந்தக் கோட்பாடு நமக்கு போதிப்பதினால், இது நமக்கு சொல்லால் விரித்துரைக்க முடியாத ஆறுதலை அளிக்கிறது. நம்முடைய தலையின் ஒரு முடியோ (அவைகள் அனைத்தும் எண்ணப்பட்டிருக்கிறது), அல்லது ஒரு அடைக்கலான் குருவிகூட, நாம் முழுமையாக நம்பியிருக்கிற நம்முடைய பரலோகப் பிதாவின் சித்தமில்லாமல் கீழே விழாது.[6] பிசாசையும், நம்முடைய எல்லா எதிரிகளையும் அவர் தடுத்து நிறுத்துகிறார் என்று நாம் நம்பியிருப்பதால், அவருடைய சித்தமும் அனுமதியும் இல்லாமல் அவைகள் நம்மை காயப்படுத்த முடியாது. ஆகவே, தேவன் எதையும் கருத்தில் கொள்ளவில்லை, அவர் எல்லாவற்றையும் தற்செயலாக நிகழட்டும் என்று விட்டுவிடுகிறார் என சொல்லும் சிற்றின்பக் கோட்பாட்டாளர்களாகிய எபிகியூரியர்களின் (Epicureans) மோசமான பிழையை நாங்கள் நிராகரிக்கிறோம்.

[1] **யோவான்** 5:17; **எபி** 1:3; **நீதி** 16:4; **சங்** 104:9; **சங்** 139:2;

[2] **யாக்** 4:15; **யோபு** 1:21; 1 **இராஜா** 22:20; **அப்** 4:28; 1 **சாமு** 2:25; **சங்** 115:3; 45:7; **ஆமோ** 3:6; **உபா** 19:5; **நீதி** 21:1; **சங்** 105:25; **ஏசா** 10:5-7; 2 **தெச** 2:11; **எசே** 14:9; **ரோமர்** 1:28; **ஆதி** 45:8; 1:20; 2 **சாமு** 16:10; **ஆதி** 27:20; **சங்** 75:7-8; **ஏசா** 45:7; **நீதி** 16:4; **புல** 3:37-38; 1 **இராஜா** 22:34, 38; **யாத்** 21:13

[3] **மத்** 8:31; 32; **யோவான்** 3:8

[4] **ரோமர்** 11:33-34

[5] **மத்** 8:31; **யோபு** 1:12; 2:6

[6] **மத்** 10:29-30

## அதிகாரம் 14

## மனிதனது படைப்பும் வீழ்ச்சியும், மற்றும் மெய்யாக நன்மை செய்ய இயலாத தன்மையும்

தேவன் மனிதனை பூமியின் மண்ணிலிருந்து உண்டாக்கி, தம்முடைய சாயலாகவும், ரூபத்தின் படியேயும்[1] அவனை நல்லவனாக, நீதியுள்ளவனாக, பரிசுத்தமுள்ளவனாக மற்றும் எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய சித்தத்திற்கு விருப்பத்தோடு இணங்கக்கூடியவனாகவே[2] படைத்தார் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆனால் அவ்வளவு உயர்மதிப்புடையவனாக இருந்தும் அவன் அதை புரிந்துகொள்ளாமலும், அவனுடைய மாண்பை கண்டுணராமலுமிருந்து,[3] தன்னிச்சையோடு தன்னைப் பாவத்திற்குக் கீழ்ப்படுத்தி, பிசாசின் வார்த்தைக்குக் செவிசாய்த்ததின்[4] விளைவாக மரணத்திற்கும், சாபத்திற்கும் தன்னை உட்படுத்தினான். ஏனென்றால் ஜீவனுக்கென்று தான் பெற்றுக்கொண்ட கட்டளையை[5] அவன் மீறினான்; அந்தப் பாவத்தினாலே தனக்கு மெய்யான ஜீவனாக இருந்த தேவனிடமிருந்து[6] தன்னைத்தானே அவன் பிரித்துக்கொண்டு, தன்னுடைய முழு சுபாவத்தையும் பாவத்திற்குள்ளாக மாசுப்படுத்தி,[7] தனது சரீர மற்றும் ஆத்தும மரணத்திற்கு பொறுப்பாளியாய் மாறிப்போனான்.[8] இவ்வாறு தன்னுடைய எல்லா வழிகளிலும் பொல்லாதவனாகவும், வக்கிரமானவனாகவும், மாசுடையவனாகவும் அவன் மாறியதால், தான் தேவனிடமிருந்து பெற்ற சிறந்த மாண்புகளையெல்லாம்[9] இழந்துபோனான். ஆயினும், மனிதன் சாக்குப்போக்கு சொல்ல முடியாத அளவிற்கு[10] சில தடயங்களை மாத்திரம்[11] தன்னோடு தக்கவைத்திருக்கிறான். ஏனென்றால் நம்மிலுள்ள எல்லா ஒளியும் இருளாக மாற்றப்பட்டுவிட்டது.[12] வேதாகமம் போதிக்கிறபடி, ஒளியானது இருளில் பிரகாசிக்கிறது, இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.[13] இங்கு யோவான் மனிதனை இருளில் இருக்கிறான் என்று குறிப்பிடுகிறார்.

ஆகவே, மனிதன் பாவத்திற்கு அடிமையாக இருந்து,[14] பரலோகத்திலிருந்து அவனுக்கு அளிக்கப்பட்டாலொழிய[15] அவனிடத்தில் ஒன்றுமில்லை என்பதினால், மனிதனுடைய சுயாதீன சித்தத்தைப் பொறுத்தவரையில், மேற்கூறியவற்றிற்கு பொருந்தாத எந்தவொரு போதனையையும் நாங்கள் நிராகரிக்கிறோம். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்"[16] என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்க, தன்னாலே எந்தவொரு நன்மையையும் செய்ய முடியும் என்று யாரால் மேன்மைப் பாராட்ட முடியும்? "மாம்சசிந்தை "தேவனுக்கு விரோதமான பகை"[17] என்று புரிந்துகொள்ளும்போது யாரால் தன்னுடைய சித்தத்தைக் குறித்து பெருமை பாராட்ட முடியும்? "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை

ஏற்றுக்கொள்ளான்"[18] என்று வேதம் கூறியிருக்க யாரால் தன்னுடைய அறிவைக் குறித்து பேச முடியும்? சுருக்கமாக, "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது"[19] எனும்போது, யாரால் தன் சுயத்திலிருந்து தேவனுக்கு ஒரு யோசனையை எடுத்துக்காட்ட முடியும்? ஆகவே, "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்"[20] என்று அப்போஸ்தலனாகிய பவுல் போதித்தது உறுதியானதாகவும், தீர்க்கமானதாகவும் இருக்கவேண்டும். ஏனென்றால், கிறிஸ்துவினுடைய ஈடுபாடு இல்லாதவரை எந்தவொரு தெய்வீக சித்தத்திற்கும் புரிதலுக்கும் இணங்கக்கூடிய விருப்பமும் புரிதலும் மனிதனிடத்தில் இல்லை. ஆகையால் கிறிஸ்து, "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது"[21] என்று கிறிஸ்து நமக்குப் போதிக்கிறார்.

1 **ஆதி** 1:26; **பிர** 7:29; **எபே** 4:24
2 **ஆதி** 1:31; **எபே** 4:24
3 **சங்** 49:20; **ஏசா** 59:2
4 **ஆதி** 3:6, 17
5 **ஆதி** 3:3, 7
6 **ஏசா** 59:2
7 **எபே** 4:18
8 **ரோமர்** 5:12; **ஆதி** 2:17; 3:19
9 **ரோமர்** 3:10
10 **ரோமர்** 1:20, 21; **அப்** 17:27
11 **அப்** 14:16-17; 17:27
12 **எபே** 5:8; **மத்** 6:23
13 **யோவான்** 1:5
14 **ஏசா** 26:12; **சங்** 94:11; **யோவான்** 8:34; **ரோம** 6:17; 7:5, 17
15 **யோவான்** 3:27; **ஏசா** 26:12
16 **யோவான்** 3:27; 6:44, 65
17 **ரோமர்** 8:7
18 1 **கொரி** 2:14; **சங்** 94:11
19 2 **கொரி** 3:5
20 **பிலி** 2:13
21 **யோவான்** 15:5

## அதிகாரம் 15

## ஜென்ம (மூலப்) பாவம்

ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாக ஜென்ம பாவமானது மனுக்குலம் முழுவதும் பரவியது[1] என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். இது முழு மனித இயல்பையும் பாதித்து, தாயின் கருவிலிருக்கும் குழந்தைகளையும் தொற்றக்கூடிய ஒரு மரபு வழித்தோன்றலின் பிணியாக இருந்து,[2] மனுக்குலத்தின் ஒவ்வொரு வகையான பாவத்திற்கும் வேராக இருக்கிறது.[3] ஆகையால், எல்லா மனிதர்களையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க போதுமானவளவிற்கு[4] இது தேவனுடைய பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்கதும் அருவருப்பானதாகவும் இருக்கிறது. ஒரு நீரூற்றிலிருந்து தண்ணீரானது புறப்பட்டு வருவதுபோல, பாவம் எப்போதுமே இந்த துன்பகரமான மூலத்திலிருந்து வெளிப்பட்டுக் கொண்டே இருப்பதால் ஞானஸ்நானத்தாலும் அல்லது வேறெந்த முறையினாலும் அது எந்த வகையிலும் ஒழிக்கப்படாது. இந்நிலையில்கூட, தேவனுடைய பிள்ளைகள் ஆக்கினைக்கு உட்படுத்தப்படாமல், அவருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் அவர்களுக்கு அது மன்னிக்கப்படுகிறது. அவர்கள் பாவத்தில் பாதுகாப்பாக இளைப்பாற வேண்டும் என்பதற்காக அது மன்னிக்கப்படாமல், இந்த சீரழிவைக் குறித்த உணர்வு விசுவாசிகளை ஆழ்துயரோடு, அழிந்துபோகக்கூடிய இந்த சரீரத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று ஏங்கச் செய்ய வேண்டும்.[5] ஆகவே, பாவமானது நாம் பழகிக்கொள்வதின் விளைவுதான் என்று கூறுகிற பிலேஜியனிர்களின் (Pelagians) உபதேசப் பிழையை நாங்கள் நிராகரிக்கிறோம்.

[1] **ரோமர்** 5:12, 13; **சங்** 51:7; **ரோமர்** 3:10; **ஆதி** 6:3; **யோவான்** 3:6; **யோபு** 14:4

[2] **ஏசா** 48:8; **ரோமர்** 5:14

[3] **கலா** 5:19; **ரோமர்** 7:8, 10, 13, 17-18, 20, 23

[4] **எபே** 2:3, 5

[5] **ரோமர்** 7:18, 24

---

## அதிகாரம் 16

## நித்தியமான தெரிந்துகொள்ளுதல்

ஆதாமின் சந்ததியார் அனைவரும் அவனது பாவத்தினால் சீரழிக்கப்பட்டு, நித்திய அழிவிற்குள்ளாக விழுந்துபோன விஷயத்தில், தேவன் யார் என்பதை அவர் இருக்கின்ற வண்ணமாகவே காட்டினார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர்

இரக்கமுள்ளவர் மற்றும் நீதியுள்ளவர்.[1] தம்முடைய நித்தியமான மற்றும் மாறாத ஆலோசனையினால், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிற்குள்ளாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அவர்களுடைய கிரியைகளைப் பார்க்காமல்,[2] அவருடைய நற்குணத்தின் நிமித்தமாக கிறிஸ்துவுக்குள் அவர்களை இந்த அழிவிலிருந்து விடுவித்து பாதுகாக்கின்ற விஷயத்தில் அவர் இரக்கமுள்ளவராக இருக்கிறார்; மற்றவர்களை தங்களுக்குத் தாங்களே வருவித்துக்கொண்ட வீழ்ச்சியிலும் அழிவிலும் விட்டுவிடுவதில்[3] அவர் நீதியுள்ளவராக இருக்கின்றார்.

[1] **ரோமர்** 9:18, 22-23; 3:12

[2] **ரோமர்** 9:15-16; 11:32; **எபே** 2:8-10; **சங்** 100:3; 1 **யோவான்** 4:10; **உபா** 32:8; 1 **சாமு** 12:22; **சங்** 115:5; **மல்** 1:2; 2 **தீமோ** 1:9; **ரோமர்** 8:29; 9:11, 21; 11:5-6; **எபே** 1:4; **தீத்து** 3:4-5; **அப்** 2:47; 13:48; 2 **தீமோ** 2:19-20; 1 **பேது** 1:2; **யோவா** 6:27; 15:16; 17:9

[3] **ரோமர்** 9:17, 18; 2 **தீமோ** 2:20

---

## அதிகாரம் 17

## வீழ்ச்சியடைந்த மனிதனின் மீட்பு

நம்முடைய மிகுந்த இரக்கமுள்ள தேவன், அவருடைய போற்றுதலுக்குரிய தெய்வீக ஞானத்தினாலும், நன்மையினாலும், மனிதன் தன்னை இந்த விதத்தில் மாம்ச மற்றும் ஆவிக்குரிய மரணத்தில் மூழ்கடித்து, தன்னை முற்றிலும் பரிதாபத்திற்குள்ளாக்கியதைக் கண்டு, சர்ப்பத்தின் தலையை நசுக்கப்போகிற ஸ்திரீயினிடத்தின்று பிறக்கவேண்டிய தன்னுடையக் குமாரனை அளிப்பேன் என்று வாக்குப்பண்ணி,[1] அவன் பயந்து நடுங்கி[2] தேவனுடைய சமூகத்திலிருந்து விலகி ஓடினாலும், அவனைத் தேடவும், தேற்றவும், சித்தங்கொண்டார் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம்.

[1] **எபி** 2:14; **ஆதி** 22:18; **ஏசா** 7:14; **யோவான்** 7:42; 2 **தீமோ** 2:8; **எபி** 7:14; **ஆதி** 3:15; **கலா** 4:4

[2] **ஆதி** 3:8-9, 19; **ஏசா** 65:1-2

---

## அதிகாரம் 18

## கிறிஸ்துவின் மானுடப் பிறப்பு

தேவன் தன்னுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாயினால் முற்பிதாக்களுக்கு வாக்குப்பண்ணின தனது வாக்குறுதியை[1] தன்னுடைய ஒரேபேறான நித்திய குமாரனை நியமிக்கப்பட்ட காலத்திலே அனுப்பினதினாலே நிறைவேற்றினார் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர் அடிமையின் ரூபமெடுத்து, பாவம் தவிர[2] மற்ற எல்லாவற்றிலேயும் மனித சாயலின் பெலவீனங்களை தன்மீது ஏற்றுக்கொண்டு மனிதர்களில் ஒருவரானார்.[3] பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மனிதனுடைய சேர்க்கை இல்லாமல்[4] கிருபைப் பெற்ற கன்னி மரியாளின் வயிற்றில் கருவானார். வெறுமனே சரீரத்தில் மாத்திரம் மனித சாயலை அவர் பெற்றிராமல், ஒரு மெய்யான மனிதனாக இருக்கும் படியாக மனித ஆத்துமாவையும் பெற்றிருந்தார்.[5] ஆத்துமாவும், சரீரமும் பாவத்தில் வீழ்ந்து போனதால் அவ்விரண்டையும் காப்பாற்ற அவர் அவைகளை தன்மீது எடுக்க வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகவே, பிள்ளைகளின் மாம்சத்திலும் இரத்தத்திலும் கிறிஸ்து பங்குதாரரானார்[6] என்பதை நாங்கள் அறிக்கையிடுகிறோம் (கிறிஸ்து தன்னுடையத் தாயின் மனித சாயலை எடுக்கவில்லை என்று மறுதலிக்கும் மறு ஞானஸ்நானக் கோட்பாட்டாளர்களாகிய அனபாப்டிஸ்டுகளின் (Anabaptists) துர் உபதேசத்தை நாங்கள் எதிர்க்கிறோம்). ஆனபடியினால் கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப் பிறந்தவரும்,[7] மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும்,[8] மரியாளின் கர்ப்பத்தின் கனியாகவும்,[9] ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும்,[10] தாவீதின் கிளையாகவும்,[11] ஈசாயின் வேர்களிலிருந்து எழும்பின கிளையாகவும்,[12] யூதா கோத்திரத்தில் தோன்றினவராகவும்,[13] மாம்சத்தின்படி யூதர்களிடத்திலிருந்து வந்தவராகவும்,[14] ஆபிரகாமின் சந்ததியாகவும்,[15] பாவம் தவிர மற்ற எல்லாவற்றிலும் தன்னுடைய சகோதரர்களுக்கு ஒப்பானவராகவும்,[16] தேவன் நம்மோடிருக்கிறார் என்று நாம் சொல்லும்படியாக நம்முடைய இம்மானுவேலாகவும்[17] இருக்கிறார்.

[1] **ஏசா** 11:1; **லூக்** 1:55; **ஆதி** 26:5; 2 **சாமு** 7:12; **சங்** 132:11; **அப்** 13:23

[2] **எபி** 2:14-15; 4:15

[3] 1 **தீமோ** 2:5; 3:16; **பிலி** 2:7

[4] **லூக்** 1:31; 34-35

[5] **மத்** 26:28; **யோவான்** 12:27

[6] **எபி** 2:14

[7] **அப்** 2:30

[8] **சங்** 132:11; **ரோமர்** 1:5

[9] **லூக்** 1:42

[10] **கலா** 4:4

[11] **எரே** 33:15

[12] **ஏசா** 11:1

[13] **எபி** 7:14

[14] **ரோமர்** 9:5

[15] **ஆதி** 22:18; 2 **சாமு** 7:12; **மத்** 1:1; **கலா** 3:16

[16] **எபி** 2:15–17

[17] **ஏசா** 7:14; **மத்** 1:23

---

**அதிகாரம்** 19

**கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தின் இரு தன்மைகளின் ஒருங்கிணைப்பும், தனித்துவமும்**

இந்த கருத்தருத்தலின் மூலம் குமாரனின் ஆளத்துவம் பிரிக்கமுடியாத வகையில் ஒன்றுபட்டு மனித சுபாவத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆகவே இரண்டு தேவ குமாரர்களோ அல்லது இரண்டு நபர்களோ இல்லாமல், மாறாக இரண்டு தன்மைகளும் ஒரே மனிதனில் ஒன்றுபட்டுள்ளன; இருந்தபோதும் இந்த இரண்டு தன்மைகளும் ஒன்று மற்றொன்றோடு கலந்துவிடாமல், தங்களுடைய தனித்துவமான பண்புகளை தங்களில் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. அதினால், வானத்தையும் பூமியையும் நிரப்புகின்ற அவருடைய தெய்வீகத் தன்மையானது எப்போதும் உருவாக்கப்படாமலும், நாட்களின் ஆரம்பமும் முடிவும் இல்லாமல் இருக்கிறது.[1] அதேபோலவே, அவருடைய மனித தன்மையும் தன்னுடைய பண்புகளை இழக்காமல், நாட்களின் ஆரம்பத்தைக் கொண்டிருந்து, மெய்யான சரீரத்திற்குரிய சகல காரியங்களையும் கொண்ட எல்லையுடைய சரீரமாக இருந்தது.[2] கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் அந்த சரீரத்திற்கு அவர் அழியாமையைக் கொடுத்திருந்தாலும், அவருடைய மனித இயல்பின் யதார்த்தத்தை அவர் மாற்றவில்லை. நம்முடைய இரட்சிப்பும் உயிர்த்தெழுதலும் அவருடைய சரீரத்தின் யதார்த்தத்தைப் பொறுத்ததாகவே இருக்கிறது.

ஆனால் இந்த இரண்டு தன்மைகளும் அவருடைய மரணத்தால்கூட பிரிக்கப்படாதபடிக்கு ஒரே நபரில் மிகவும் நெருக்கமாக ஒன்றுபட்டுள்ளன. ஆகவே, அவர் மரிக்கும்போது தன்னுடைய பிதாவின் கரங்களில் ஒப்படைத்தது அவருடைய சரீரத்திலிருந்து பிரிந்து சென்ற மெய்யான மனித ஆவியாக இருந்தது.[3] அவர் கல்லறையில் வைக்கப்பட்டிருந்தபோதும் அவரது தெய்வீக

இயல்பு அவரது மனித இயல்புடன் இணைந்தே இருந்தது; அவர் சிறு குழந்தையாக இருந்தபோது அவருடைய தெய்வீகத் தன்மை சிறிது காலத்திற்கு தன்னை வெளிப்படுத்தாமல் இருந்ததைப்போலவே அவர் மரித்தபின்பும் இருந்ததே தவிர, அவருடைய தெய்வீகம் ஒருபோதும் அவரைவிட்டுப் போகவில்லை. ஆகவே அவர் மெய்யான தேவனாகவும், மெய்யான மனிதனாகவும் இருக்கிறார் என்று நாங்கள் அறிக்கையிடுகிறோம். மரணத்தை மேற்கொண்டதினாலே மெய்யான தேவனாகவும், தன்னுடைய மாம்சத்தின் பலவீனத்திற்கேற்ப நமக்காய் மரித்தபடியினாலே மெய்யான மனிதனாகவும் அவர் இருக்கின்றார்.

[1] **எபி** 7:3

[2] 1 **கொரி** 15:13, 21; **பிலி** 3:21; **மத்** 26:11; **அப்** 1:2, 11; 3:21; **லூக்** 24:39; **யோவான்** 20:25, 27

[3] **லூக்** 23:46; **மத்** 27:50

---

**அதிகாரம்** 20

## தேவன் தனது நீதியையும், இரக்கத்தையும் கிறிஸ்துவில் வெளிப்படுத்தியிருக்கிறார்

பூரணமான இரக்கமும் நீதியுமுள்ள தேவன், எந்த சுபாவத்தினால் அவருக்கு விரோதமாக கீழ்ப்படியாமை இழைக்கப்பட்டதோ, அதே சுபாவத்தை ஏற்றுக்கொண்டு, அந்த சுபாவத்தினாலே திருப்திப்படுத்தப்படவும், தன்னுடைய கசப்பான பாடு மற்றும் மரணத்தின் மூலம்[1] பாவத்திற்கான தண்டனையை சுமக்கவும், அவருடைய குமாரனை அனுப்பினார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆகவே, அவர் மூலமாக நாம் அழியாமையையும் நித்திய ஜீவனையும் பெறும்படியாக, தேவன் நம்முடைய அக்கிரமங்களை[2] தன்னுடைய குமாரன் மீது சுமத்தி தனது நீதியை வெளிப்படுத்தினார்; குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவும், ஆக்கினைக்குப் பாத்திரவான்களாகவும் இருந்த நம்மேல் அவருடைய இரக்கத்தையும் நன்மையையும் பொழிந்து, தம்முடைய முழுமையான மற்றும் பரிபூரணமான அன்பின் நிமித்தமாக தன்னுடைய குமாரனை நமக்காக மரிக்க ஒப்புக்கொடுத்து, நமது நீதிமானாக்கப்படுதலுக்காக அவரை எழுப்பினார்.[3]

[1] **எபி** 2:14; **ரோமர்** 8:3, 32-33

[2] **ஏசா** 53:6; **யோவான்** 1:29; 1 **யோவான்** 4:9

[3] **ரோமர்** 4:25

---

## அதிகாரம் 21

## கிறிஸ்துவின் திருப்திப்படுத்துதலும், நம்முடைய ஒரே பிரதான ஆசாரியராக இருத்தலும்

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி,[1] நித்திய பிரதான ஆசாரியராக இயேசு கிறிஸ்து சத்தியப்பிரமாணத்துடன் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், சிலுவையில் தன்னை பலியாக ஒப்புக்கொடுத்ததின் மூலமும், தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தபடி நம்முடைய பாவங்களைக் கழுவ தன்னுடைய விலைமதிப்பில்லாத இரத்தத்தை சிந்தினதின் மூலமாகவும், அவருடைய முழு திருப்தியால் பிதாவின் கோபத்தைத் திருப்திப்படுத்தி, பிதாவிற்கு முன்பாக நம் சார்பாக அவர் தன்னை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்[2] என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்[3] என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும் பொந்தியு பிலாத்துவினால் முன்பு குற்றமில்லாதவர் என்று அறிவிக்கப்பட்டாலும், பின்னர் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டார்.[4] ஆகவே அவர் எடுத்துக்கொள்ளாததை திரும்பச் செலுத்தி,[5] நீதியான அவர் அநீதியானவர்களுக்காக துன்புறுத்தப்பட்டார்.[6] நம்முடையப் பாவங்களுக்குக் கிடைக்கவேண்டிய கொடூரமான தண்டனையை அவர் தன்னுடைய சரீரத்திலும் ஆத்துமாவிலும், அவருடைய வியர்வை இரத்தத்தின் துளிகளாக தரையில் விழுமளவிற்கு உணர்ந்தார்.[7] என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்? என்று கதறினார். [8] இவையெல்லாவற்றையும் நம்முடைய பாவங்களை நீக்குவதற்காக அவர் அனுபவித்தார்.

ஆகவே, அப்போஸ்தலனாகிய பவுலோடு நாங்களும் இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.[9] என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்[10] என்று சேர்ந்து சொல்கிறோம். அவருடைய காயங்களில் நாம் எல்லா விதமான ஆறுதல்களையும் கண்டடைகிறோம். தேவனோடு ஒப்புரவாக்கப்படுவதற்காகவும், விசுவாசிகள் என்றென்றும் பூரணப்படுத்தப்பட்டவர்களாக ஆக்கப்படுவதற்காகவும்[11] ஒரேதரம் செய்துமுடிக்கப்பட்ட இந்த ஒரே பலியை விட, வேறு வழிகளை நாடுவதோ அல்லது கண்டுபிடிப்பதோ அவசியமில்லை. தேவனுடைய தூதனால் அவர் இயேசு, அதாவது இரட்சகர் என அழைக்கப்பட்டதற்கான காரணமும் இதுதான்,

ஏனென்றால் அவர் தம் ஜனங்களை அவர்களுடையப் பாவங்களிலிருந்து இரட்சிப்பார்.[12]

[1] **சங்** 110:4; **எபி** 5:10

[2] **கொலோ** 1:14; **ரோமர்** 5:8-9; **கொலோ** 2:14; **எபி** 2:17; 9:14; **ரோமர்** 3:24; 8:2; **யோவான்** 15:3; **அப்** 2:24; 13:28; **யோவான்** 3:16; 1 **தீமோ** 2:6

[3] **ஏசா** 53:5, 7, 12

[4] **லூக்** 23:22, 24; **அப்** 13:28; **சங்** 22:16; **யோவான்** 18:38; **சங்** 69:5; 1 **பேது** 3:18

[5] **சங்** 69:4

[6] 1 **பேது** 3:18

[7] **லூக்** 22:44

[8] **சங்** 22:1; **மத்** 27:46

[9] 1 **கொரி** 2:2

[10] **பிலி** 3:8

[11] **எபி** 9:25-26; 10:14

[12] **மத்** 1:21; **அப்** 4:12

---

## அதிகாரம் 22

## கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தினால் நீதிமானாகுதல்

இந்த மாபெரும் இரகசியத்தின் உண்மையான அறிவைப் பெறுவதற்கு பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய எல்லா தகுதியையும் சார்ந்து,[1] இனி அவரைத் தவிர வேறு எதையும் தேடாமல்,[2] அவரை சொந்தமாக்கிக் கொள்ளும் ஒரு உண்மையான விசுவாசத்தை நம் இருதயங்களில் ஒளிரச்செய்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஏனென்றால், ஒன்று நம்முடைய இரட்சிப்புக்குத் தேவையான அனைத்தும் இயேசு கிறிஸ்துவில் இல்லாதிருக்க வேண்டும், அல்லது அவையனைத்துமே அவரிடத்தில் இருந்தால், இயேசு கிறிஸ்துவை விசுவாசத்தின் மூலம் தங்களில் கொண்டிருப்பவர்கள் அவரில் முழுமையான இரட்சிப்பைக் கொண்டிருக்க வேண்டும்.[3] ஆகையால், கிறிஸ்து போதுமானவர் அல்ல, அவரையும் தாண்டி வேறு ஒன்று தேவை என்று யாராவது கூறுவது, கிறிஸ்துவை பாதி மீட்பராக மாற்றுவதால், அது மிகப்பெரிய தேவதூஷணமாக இருக்கும்.

ஆகவே, பவுலோடு சேர்ந்து "நாம் விசுவாசத்தினாலே மட்டுமே நீதிமான்களாக்கப்படுகிறோம்" அல்லது "கிரியைகள் இல்லாமல் விசுவாசத்தினால்"[4] மட்டுமே நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று நாங்களும்

கூறுகிறோம். இருப்பினும், இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், விசுவாசம் தன்னில் தானே நம்மை நீதிமானாக்குகிறது என்று நாம் அர்த்தப்படுத்துவதில்லை. ஏனென்றால் விசுவாசம் என்பது நம்முடைய நீதியாகிய கிறிஸ்துவைத் தழுவிக்கொள்ளும் ஒரு உபகரணம் மட்டுமே. ஆனால், இயேசு கிறிஸ்து அவருடைய எல்லா தகுதிகளையும், நமக்காகவும், நம்முடைய இடத்திலும் அவர் செய்த சகல பரிசுத்த செயல்களையும் நமக்குக் கிடைக்கச் செய்வதில் நம்முடைய நீதியாக இருக்கிறார்.[5] கிறிஸ்துவுடனும், அவர் சம்பாதித்த சகல நன்மைகளுடனும் நம்மை இணைக்கின்ற ஒரு உபகரணமே விசுவாசமாக இருக்கிறது. அந்த நன்மைகள் நம்முடையதாக இருக்கும்போது, அவை நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து விடுவிப்பதற்கு போதுமானதற்கும் அதிகமானவையாக இருக்கிறது.

[1] **எபே** 3:16–17; **சங்** 51:13; **எபே** 1:17–18; 1 **கொரி** 2:12

[2] 1 **கொரி** 2:2; **அப்** 4:12; **கலா** 2:21; **எரே** 23:6; 1 **கொரி** 1:30; **எரே** 31:10

[3] **மத்** 1:21; **ரோமர்** 3:27; 8:1; 33

[4] **ரோமர்** 3:27; **கலா** 2:6; 1 **பேது** 1:4–5; **ரோமர்** 10:4

[5] **எரே** 23:6; 1 **கொரி** 1:30; 2 **தீமோ** 1:2; **லூக்** 1:77; **ரோமர்** 3:23–25; 4:5; **சங்** 32:1–2; **பிலி** 3:9; **தீத்** 3:5; 2 **தீமோ** 1:9

---

## அதிகாரம் 23

## தேவன் முன்பான நமது நீதி எதில் உள்ளடங்கியுள்ளது

நம்முடைய இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் நம்முடைய பாவங்களை நீக்குவதில் இருக்கின்றது என்றும், அதில் தேவனுக்கு முன்பதான நம்முடைய நீதியும் அடங்கியிருக்கிறது என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். தாவீதும், பவுலும், கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிறவன் எவனோ அவன் பாக்கியவான்[1] என்று நமக்குக் கற்பித்திருக்கிறார்கள். அதே அப்போஸ்தலன் நாம் "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம்"[2] என்று கூறுகிறார்.

ஆகவே, இந்த அஸ்திபாரத்தை நாங்கள் எப்பொழுதும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு, எல்லா மகிமையையும் தேவனுக்கு செலுத்தி,[3] அவருக்கு முன்பாக எங்களைத் தாழ்த்தி, எங்களையோ அல்லது எங்களுடைய எந்தவொரு தகுதியையோ நம்புவதாகக் கருதாமல்,[4] நாங்கள் உண்மையிலேயே யாராய் இருக்கிறோம் என்று ஒப்புக்கொண்டு, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின்

கீழ்ப்படிதலின் மேல் நம்பிக்கை வைத்து, அதிலே இளைப்பாறுகிறோம்.[5] அவரில் நாம் விசுவாசம் வைக்கும்போது அது நம்முடையதாகிறது.[6] நம்முடைய எல்லா அக்கிரமங்களையும் மூடுதற்கும், தேவனிடம் கிட்டிச்சேருவதற்கு நமக்கு தைரியத்தையும் தந்து;[7] பயத்தினால் நடுங்கி, அத்தி இலைகளின் மூலம் தன்னை மூடிமறைக்க முயன்ற, நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமின் முன்மாதிரியைப் பின்பற்றாமல்,[8] பயம், நடுக்கம் மற்றும் திகில் ஆகியவற்றிலிருந்து நம்முடைய மனசாட்சியை விடுவிக்க இது போதுமானது. தேவனுக்கு முன்பாக நாம் நம்மை சார்ந்தோ அல்லது வேறு எந்த படைப்புகளையும் சார்ந்தோ நிற்கவேண்டுமென்றால், ஐயோ! நாம் நிச்சயமாக பட்சிக்கப்படுவோம்.[9] ஆகவே, நாம் ஒவ்வொருவரும் "கர்த்தாவே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்: நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே"[10] என்று தாவீதுடன் சேர்ந்து ஜெபிக்கவேண்டும்.

1 **லூக்** 1:77; **கொலோ** 1:14; **சங்** 31:1-2; **ரோமர்** 4:6-7

2 **ரோமர்** 3:23-24; **அப்** 4:12

3 **சங்** 115:1; 1 **கொரி** 4:7;

4 1 **கொரி** 4:7; **ரோமர்** 4:2; 1 **கொரி** 1:29, 31

5 **ரோமர்** 5:19

6 **எபி** 11:6-7; **எபே** 2:8; 2 **கொரி** 5:19; 1 **தீமோ** 2:6

7 **ரோமர்** 5:1; **எபே** 3:12; 1 **யோவான்** 2:1

8 **ஆதி** 3:7

9 **ஏசா** 33:14; **உபா** 27:26; **யாக்** 2:10

10 **சங்** 130:3; **மத்** 18:23-26; **சங்** 143:2; **லூக்** 16:15

---

## அதிகாரம் 24

## மனிதனின் பரிசுத்தமாகுதலும் நற்கிரியைகளும்

இந்த உண்மையான விசுவாசமானது தேவனுடைய வார்த்தையைக் கேட்பதன் மூலமும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டினாலும்[1] மனிதனில் செயல்படுத்தப்படுவதால், அது அவனை மறுபிறப்படையச் செய்து ஒரு புதிய மனிதனாக உருவாக்கி, அவனை ஒரு புதிய வாழ்க்கையை வாழ வைத்து,[2] பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடையச் செய்கிறது[3] என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆகவே, இந்த நீதிமானாக்கும் விசுவாசம் தேவ பக்தியுள்ள மற்றும் பரிசுத்தமான வாழ்வில் மனிதர்களை அசட்டையுள்ளவர்களாக மாற்றுகிறது என்பது உண்மைக்கு வெகு தூரமானது.[4] இந்த விசுவாசம் இல்லையென்றால், சுய அன்பினாலும், தண்டனைக்கு தப்பவேண்டும் என்ற

பயத்தினாலேயுமே அல்லாமல், தேவன் மீதுள்ள அன்பின் நிமித்தமாக அவர்கள் ஒருபோதும் தேவனுக்கென்று எதையும் செய்யமாட்டார்கள். ஆகவே, இந்த பரிசுத்த விசுவாசமானது மனிதனுக்குள் கனி தராததாக இருக்க முடியாது; ஏனென்றால் நாம் இங்கு ஒரு வீண் விசுவாசத்தைக் குறித்து பேசிக் கொண்டிராமல்,[5] அன்பினால் கிரியை செய்கின்ற விசுவாசம்,[6] தேவன் தம்முடைய வார்த்தையில் கட்டளையிட்டுள்ள கிரியைகளை நடைமுறைப்படுத்துவதில் மனிதனை உற்சாகப்படுத்தக்கூடியதான விசுவாசம் என்று வேதாகமம் அழைக்கின்ற அத்தகைய விசுவாசத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம். அத்தகைய கிரியைகள் விசுவாசத்தின் நல்ல வேரிலிருந்து வளர்ச்சியடையும் போது, அவைகள் தேவனுடைய பார்வையில் நல்லதாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்கவையாகவும் இருக்கின்றன. ஏனெனில் அவை அனைத்தும் அவருடைய கிருபையால் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கின்றன; எனினும் நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்கும் நற்கிரியைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.[7] ஏனென்றால், நாம் நற்கிரியைகளை செய்வதற்கு முன்பே, கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நீதிமான்களாக்கப்படுகிறோம்;[8] இல்லையெனில், ஒரு மரம் முதலில் தன்னில்தான் நல்லதாக இல்லாத பட்சத்தில் அதன் கனிகள் நல்லதாக இருக்க முடியும் என்பதை விட வேறெப்படியும் அவைகள் நற்கிரியைகளாக இருக்கமுடியாது.[9]

ஆகையால், நாம் நற்கிரியைகளைச் செய்வதினால் தேவனுக்கு முன்பாக தகுதி பெறுவோம் (நம்மால் என்ன நன்மையை சம்பாதிக்க முடியும்?) என்று அவைகளை செய்வதில்லை; நற்கிரியைகளை செய்வதற்கு நாம் தேவனிடம் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம், அவர் நமக்கு அல்ல.[10] ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவர்.[11] ஆகவே, என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதை கவனமாக கேட்போம்: "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்."[12]

இதற்கிடையில், தேவன் நம்முடைய நற்கிரியைகளுக்கு பலன் அளிக்கிறார் என்பதை நாம் மறுக்கவில்லை, ஆனால் அவருடைய கிருபையினால்தான் அவர் தம்முடைய ஈவுகளை முடிசூட்டுகிறார்.[13] மேலும், நாம் நற்செயல்களைச் செய்தாலும், நம்முடைய இரட்சிப்பிற்கு அவற்றை அவசியமாக பார்ப்பதில்லை.[14] ஏனென்றால், நம்முடைய மாம்சத்தால் மாசுபட்டதும், தண்டனைக்குரியதுமான[15] காரியங்களை மட்டுமே நம்மால் செய்ய முடியுமே தவிர, வேறொன்றையும் செய்ய முடியாது. ஒருவேளை நாம் அத்தகைய நற்கிரியைகளை செய்ய

முடிந்தாலும், நமது பாவத்தைக் குறித்த ஒரு நினைவு தேவன் நம்மை நிராகரிக்கப் போதுமானது. அதினால், பிறகு நாம் எப்போதும் சந்தேகத்தில் வாழ்ந்து, எந்தவிதமான உறுதியும் இல்லாமல் தூக்கி எறியப்படுவோம். நமது இரட்சகரின் பாடுகள் மற்றும் மரணத்தினால் உண்டான நன்மைகளில் நாம் தங்கி ஓய்ந்திராவிட்டால், நம்முடைய மனசாட்சி தொடர்ந்து வேதனைப்பட்டுக் கொண்டேயிருக்கும்.[16]

[1] 1 **பேது** 1:23; **ரோமர்** 10:17; **யோவான்** 5:24

[2] 1 **தெச** 1:5; **ரோமர்** 8:15; **யோவான்** 6:29; **கொலோ** 2:12; **பிலி** 1:1, 29; **எபே** 2:8

[3] **அப்** 15:9; **ரோமர்** 6:4, 22; **தீத்** 2:12; **யோவான்** 8:36

[4] **தீத்** 2:12

[5] **தீத்** 3:8; **யோவான்** 15:5; **எபி** 11:6; 1 **தீமோ** 1:5

[6] 1 **தீமோ** 1:5; **கலா** 5:6; **தீத்** 3:8

[7] 2 **தீமோ** 1:9; **ரோமர்** 9:32; **தீத்** 3:5

[8] **ரோமர்** 4:4; **ஆதி** 4:4

[9] **எபி** 11:6; **ரோமர்** 14:23; **ஆதி** 4:4; **மத்** 7:17

[10] 1 **கொரி** 4:7; **ஏசா** 26:12; **கலா** 3:5; 1 **தெச** 2:13

[11] **பிலி** 2:13

[12] **லூக்** 17:10

[13] **மத்** 10:42; 25:34-35; **வெளி** 3:12, 21; **ரோமர்** 2:6; **வெளி** 2:11; 2 **யோவான்** 8; **ரோமர்** 11:6

[14] **எபே** 2:9-10

[15] **ஏசா** 64:6

[16] **ஏசா** 28:16; **ரோமர்** 10:11; **ஆப** 2:4

---

## அதிகாரம் 25

## சடங்காச்சார நியாயப்பிரமாணத்தை நீக்குதல்

நியாயப்பிரமாணத்தின் சடங்காச்சாரங்களும், அடையாளங்களும் கிறிஸ்துவின் வருகையோடு[1] முடிவிற்கு வந்துவிட்டன. அவற்றின் நிழல்கள் யாவும் நிறைவேறினபடியினாலே, அவற்றின் பயன்பாடுகள் கிறிஸ்தவர்களிடையே நிறுத்திவிடப்பட வேண்டும்;[2] ஆயினும், அவற்றின் சத்தியமும் பொருளும் இயேசு கிறிஸ்துவில் நம்மோடு இன்றும் இருக்கின்றன, அவைகள் அவரில் தங்கள் நிறைவை அடைகின்றன என்பதை நாங்கள் விசுவாசிக்கின்றோம். அதேசமயம், சுவிசேஷத்தின் கோட்பாட்டில் நம்மை உறுதிப்படுத்தவும்,[3]

தேவனுடைய சித்தத்தின்படி, அவருடைய மகிமைக்கென்று நேர்மையோடு நம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவும், நியாயப்பிரமாணத்திலிருந்தும் தீர்க்கதரிசிகளிடமிருந்தும் எடுக்கப்பட்ட சாட்சிகளை நாம் இன்றும் பயன்படுத்துகிறோம்.

[1] **ரோமர்** 10:4

[2] **கலா** 5:2-4; 3:1; 4:10-11; **கொலோ** 2:16-17

[3] 2 **பேது** 1:19

---

## அதிகாரம் 26

## கிறிஸ்துவின் பரிந்துபேசுதல்

ஒரே மத்தியஸ்தரும் பரிந்து பேசுபவருமாகிய நீதியுள்ள இயேசு கிறிஸ்து[1] மூலமாக அல்லாமல், தேவனை நாம் ஒருக்காலும் அணுக முடியாது என்று நாங்கள் நம்புகிறோம். ஆகவே, அவர் மனிதர்களாகிய நாம் தெய்வீக மாட்சிமையோடு தொடர்புகொள்ள வேண்டும் என்பதற்காக, தெய்வீகம் மற்றும் மனித இயல்புகள் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மனிதனானார். இல்லையெனில் தேவனுக்கும் நமக்கும் எந்தவொரு தொடர்பும் இருந்திருக்காது. ஆனால், பிதாவானவர் அவருக்கும் நமக்கும் இடையில் நியமித்திருக்கும் இந்த மத்தியஸ்தர், அவருடைய மகத்துவத்தால் நம்மைப் பயமுறுத்தவோ அல்லது நாம் நம்முடைய விருப்பத்தின்படி வேறொருவரைத் தேடும்படியோ செய்யக்கூடாது.[2] ஏனென்றால், பரலோகத்திலோ அல்லது பூமியிலோ, இயேசு கிறிஸ்துவை விட நம்மை அதிகமாக அன்புசெய்யக்கூடிய எந்த உயிரினமும் இல்லை;[3] அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.[4] மேலும் எல்லாவிதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பானார். அப்படியானால், ஒருவேளை, நம்மை குறித்து அதிகம் பாரப்படக்கூடிய மற்றொரு மத்தியஸ்தரை நாம் தேட வேண்டுமென்றால், நாம் அவருடைய எதிரிகளாக இருந்தபோதும்,[5] நமக்காக தன்னுடைய உயிரைக் கொடுத்த அவரை விட நம்மை அதிகமாக நேசிக்கக்கூடிய யாரை நாம் கண்டுப்பிடிக்க இயலும்? வல்லமையும் மாட்சியும் உள்ள ஒருவரை நாம் நாடினால், தம்முடைய பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்துகொண்டு, பரலோகத்திலும் பூமியிலும் எல்லா வல்லமையுமுடைய[6] அவரைக் காட்டிலும், இவற்றை அதிகமாக கொண்டவர் யார் இருக்கிறார்? தேவனின் சொந்த அன்பான மகனை விட பிதாவினால் விரைவில் கேட்கப்படக்கூடியவர் யார்?

ஆகவே வேதத்தின் பரிசுத்தவான்களை மதிக்கிறோம் என்ற பெயரில் அவர்களை நமக்காக பரிந்து பேசுபவர்களாகப் பார்ப்பது அவர்களுக்கு அவமரியாதையைக் கொண்டுவருகிறது. இது அவர்களால் ஒருபோதும் செய்யப்படாத அல்லது கேட்கப்படாத ஒன்று; அவர்களின் கடமைக்கு ஏற்ப, அவர்களது எழுத்துக்களில் காணப்படும் வகையில், இது அவர்களால் தொடர்ந்து மறுக்கப்பட்ட ஒன்று.[7] மேலும் நம்முடைய தகுதியற்றத் தன்மையையும் நாம் இங்கு ஏறெடுக்கக்கூடாது; ஏனென்றால், நம்முடைய சொந்த தகுதியின் காரணமாக நாம் ஜெபங்களை தேவனிடம் ஏறெடுக்காமல், மாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேன்மை மற்றும் தகுதியின் அடிப்படையில்[8] மட்டுமே ஏறெடுக்கிறோம். அவர் மீது வைக்கும் விசுவாசத்தினாலே அவருடைய நீதியானது நம்முடையதாகிறது.

ஆகையால், இந்த முட்டாள்தனமான பயத்தை அல்லது அவநம்பிக்கையை நம்மிடமிருந்து அகற்றுவதற்காக, அப்போஸ்தலன் "அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்"[9] என்று நேர்த்தியாக கூறியிருக்கிறார். மேலும், நம்மை ஊக்குவிப்பதற்காக, "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்"[10] என்றும் கூறுகிறார். அதே அப்போஸ்தலன், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினால், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்[11] என்று கூறுகிறார். அதேபோல, கிறிஸ்து மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராய் இருக்கிறபடியினாலே, தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.[12]

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்[13] என்று கிறிஸ்துதாமே கூறியிருக்க நமக்கு

இன்னும் என்ன தேவை? தம்முடைய சொந்த குமாரனையே நம்முடைய மத்தியஸ்தராக[14] நமக்குக் கொடுப்பது தேவனுக்கு பிரியமாக இருந்திருக்க, எந்த நோக்கத்திற்காக வேறொரு மத்தியஸ்தரை[15] நாம் நாட வேண்டும்? இன்னொருவரை பிடித்துக் கொள்வதற்காக அவரை விடாமலும், அல்லது ஒருபோதும் அவரைக் நம்மால் தேடிக்கண்டுபிடிக்க முடியாது என்பதற்காக வேறொருவரைத் தேடாமலும் இருப்போம். ஏனென்றால், தேவன் தன்னுடைய குமாரனை நமக்கு அளித்தபோது, நாம் பாவிகளென்பதை நன்கு அறிந்திருந்தார்.

ஆகையால், கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவிடம் நாம் எதைக் கேட்டாலும், அது நமக்கு அருளப்படும்[16] என்ற நிச்சயத்தோடு, கிறிஸ்துவின் கட்டளைப்படி, கர்த்தருடைய ஜெபத்தில் நாம் கற்பிக்கப்படுவதைப் போல,[17] நம்முடைய ஒரே மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக பரலோகப் பிதாவை நோக்கி கூப்பிடுகிறோம்.

[1] 1 **தீமோ** 2:5; 1 **யோவான்** 2:1; **ரோமர்** 8:33

[2] **ஓசி** 13:9; **எரே** 2:13, 33

[3] **யோவான்** 10:11; 1 **யோவான்** 4:10; **ரோமர்** 5:8; **எபே** 3:19; **யோவான்** 15:13

[4] **பிலி** 2:7

[5] **ரோமர்** 5:8

[6] **மாற்** 16:19; **கொலோ** 3:1; **ரோமர்** 8:33; **மத்** 11:27; 28:18

[7] **அப்** 10:26; 14:15

[8] **தானி** 9:17-18; **யோவான்** 16:23; **எபே** 3:12; **அப்** 4:12; 1 **கொரி** 1:31; **எபே** 2:18

[9] **எபி** 2:17-18

[10] **எபி** 4:14-16

[11] **எபி** 10:19, 22

[12] **எபி** 7:24, 25

[13] **யோவான்** 14:6

[14] 1 **தீமோ** 2:5; 1 **யோவான்** 2:1; **ரோமர்** 8:33

[15] **சங்** 44:21

[16] **யோவான்** 4:17; 16:23; 14:13

[17] **லூக்** 11:2

## அதிகாரம் 27

## கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை

ஒரே கத்தோலிக்க அல்லது உலகளாவிய திருச்சபை உண்டு[1] என்று நாங்கள் விசுவாசித்து அறிக்கையிடுகிறோம். மெய்யான கிறிஸ்தவ விசுவாசிகளை கொண்ட ஒரு பரிசுத்த சபையாக அது இருக்கிறது. அந்த விசுவாசிகள் தங்கள் இரட்சிப்பை இயேசு கிறிஸ்துவில் எதிர்பார்த்து, அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு முத்திரையிடப்படுகிறார்கள்.

இந்த சபையானது உலகத் தோற்றமுதற்கொண்டே இருக்கிறது, அதன் முடிவுபரியந்தமும் அது நிலைத்திருக்கும்.[2] கிறிஸ்து நித்திய ராஜாவாக இருக்கிறார்; மக்கள் இல்லாமல் அவர் ராஜாவாக இருக்கமுடியாது[3] என்பதிலிருந்து இது தெளிவாகிறது. இந்த பரிசுத்த திருச்சபையானது முழு உலகத்தின் பகைமைக்கு எதிராக தேவனால் பாதுகாக்கப்படுகிறது அல்லது ஆதரிக்கப்படுகிறது;[4] அவள் (திருச்சபை) சில நேரங்களில் (சிறிது நேரம்) மனிதர்களின் பார்வையில் மிகச் சிறியதாகவும், ஒன்றுமில்லாததைப்போலவும் தோன்றலாம்;[5] ஆனால், ஆகாபு மன்னனின் ஆபத்து நிறைந்த ஆட்சியிலும் பாகாலுக்கு மண்டியிடாத ஏழாயிரம் பேரை தேவன் மீதம் வைத்திருந்தார்.[6]

மேலும், இந்த பரிசுத்த திருச்சபையானது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ அல்லது சில குறிப்பிட்ட மக்களுடனோ வரையறுக்கப்பட்டதோ, கட்டுப்படுத்தப்பட்டதோ, அல்லது வரம்புக்குட்பட்டதோ அல்ல, மாறாக இது உலகம் முழுவதும் பரவி சிதறிக் கிடக்கிறது; ஆனாலும் விசுவாசத்தின் வல்லமையினால் ஒரே ஆவியில்[7] இருதயத்தோடும் விருப்பத்தோடும் ஒருசேர இணைக்கப்பட்டிருக்கிறது.[8]

[1] **ஏசா** 2:2; **சங்** 46:5; 102:14; **எரே** 31:36

[2] **மத்** 28:20; 2 **சாமு** 7:16

[3] **லூக்** 1:32-33; **சங்** 89:37-38; 110:2-4

[4] **மத்** 16:18; **யோவான்** 16:33; **ஆதி** 22:17; 2 **தீமோ** 2:19

[5] **லூக்** 12:32; **ஏசா** 1:9; **வெளி** 12:6, 14; **லூக்** 17:21; **மத்** 16:18

[6] **ரோமர்** 12:4; 11:2, 4; 1 **இராஜா** 19:18; **ஏசா** 1:9; **ரோமர்** 9:29

[7] **எபே** 4:3-4

[8] **அப்** 4:32

## அதிகாரம் 28

## எல்லாரும் தங்களை மெய்யான திருச்சபையில் இணைத்துக்கொள்ள வேண்டும்

இந்த பரிசுத்த சபையானது இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாகவும், இதற்கு வெளியாக இரட்சிப்பு இல்லை என்பதினாலும்,[1] எந்தவொரு மனிதனும், அவன் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் இந்த சபையிலிருந்து தன்னைப் பிரித்து தனியாக வாழக்கூடாது.[2] திருச்சபையின் ஒற்றுமையை நிலைநிறுத்துவதற்கும்,[3] அதனுடன் தங்களை ஒன்றிணைப்பதற்கும் எல்லா மனிதர்களும் கடமைப்பட்டவர்களாய், அதன் கொள்கைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் தங்களை அர்ப்பணித்து, கிறிஸ்துவின் நுகத்திற்குக் கீழ் தங்கள் கழுத்தைத் தாழ்த்தி,[4] மேலும் அந்த ஒரே சரீரத்தின் பொதுவான அவயவங்களாக இருந்து,[5] தேவன் அவர்களுக்கு அளித்துள்ள தாலந்துகளின்படி சகோதரர்களின் பக்திவிருத்திக்காக ஊழியம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கின்றோம்.

இந்த ஊழியமானது மிகவும் திறம்பட பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காக, தேவனுடைய வார்த்தையின்படி, சபையை சேராதவர்களிடமிருந்து தங்களை பிரித்துக் கொண்டு,[6] நீதிபதிகளும், மன்னர்களின் அரச பிரகடனங்களும் இதற்கு எதிராக நின்றாலும், தேவன் நிறுவியிருக்கும் இந்த சபையில்[7] தங்களை இணைத்துக் கொள்வது சகல விசுவாசிகளுடைய கடமையாகும். அதற்காக அவர்கள் மரணத்தையோ அல்லது வேறு ஏதேனும் உடல் ரீதியான தண்டனையையோ அனுபவிக்க நேரிட்டாலும்[8] இந்த கடமைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆகையால், தங்களை இந்த சபையிலிருந்து பிரித்துக்கொள்ளும் அல்லது அதில் தங்களை இணைத்துக் கொள்ளாத யாவருமே தேவனுடைய கட்டளைக்கு மாறாக செயல்படுகிறார்கள்.

[1] 1 பேது 3:20; யோவேல் 2:32

[2] அப் 2:40; ஏசா 52:11

[3] சங் 22:23; எபே 4:3, 12; எபி 2:12

[4] சங் 2:10-12; மத் 11:29

[5] எபே 4:12, 16; 1 கொரி 12:12

[6] அப் 2:40; ஏசா 52:11; 2 கொரி 6:17; வெளி 18:4

[7] மத் 12:30; 24:28; ஏசா 49:22; வெளி 17:14

[8] தானி 3:17-18; 6:8-10; வெளி 14:14; அப் 4:17, 19; 17:7; 18:13

## அதிகாரம் 29

## மெய் சபையின் அடையாளங்கள்; அவள் போலி சபையிலிருந்து எவ்வாறாக வேறுபடுகிறாள்?

உலகில் உள்ள அனைத்து பிரிவுகளும் திருச்சபையின் பெயரோடு ஒன்றாக இணைத்து அடையாளப்படுத்துவதால், எது மெய்யான உண்மையான திருச்சபை என்பதை ஊக்கந்தளராமல், விழிப்புணர்வோடு தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆனால் நாம் இங்கே மாயக்காரர்களைப் பற்றி பேசவில்லை, அவர்கள் திருச்சபையில் மெய்யான விசுவாசிகளாகிய நல்லவர்களுடன் கலந்திருக்கிறார்கள், வெளிப்புறமாக அவர்கள் சபைக்குள் இருந்தாலும், அவர்கள் சபையினுடையவர்கள் அல்ல.[1] ஆனால் உண்மையான திருச்சபையின் அமைப்பும், ஒற்றுமையின் ஐக்கியமும் தங்களை திருச்சபை என்று அழைத்துக்கொள்ளும் அனைத்து பிரிவுகளிலிருந்தும் வேறுபடுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

மெய்யான திருச்சபை எது என்பதை பின்வரும் அடையாளங்களை வைத்து அறிந்துகொள்ளலாம்: சுவிசேஷத்தின் போதனைகள் அங்கு தெளிவாக பிரசங்கிக்கப்பட வேண்டும்;[2] கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட சாக்கிரமெந்துகளை தூய்மையாக நிர்வகித்து அதை பேணி காக்க வேண்டும்;[3] பாவத்தைத் தண்டிக்கும் வகையில் சபை ஒழுங்கு நடவடிக்கைப் பின்பற்றப்பட வேண்டும்.[4] சுருக்கமாக, எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய பரிசுத்தமான வார்த்தையின்படி நிர்வகிக்கப்பட வேண்டும், அதற்கு மாறான சகல காரியங்களும் நிராகரிக்கப்பட வேண்டும்,[5] திருச்சபையின் ஒரே தலையாக இயேசு கிறிஸ்து இருக்கிறார்[6] என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இதன்மூலம் மெய்யான திருச்சபையை நிச்சயமாக அறித்துகொள்ளலாம், அதிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ள எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை.

திருச்சபையின் அங்கத்தவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் கிறிஸ்தவர்களுக்குரிய அடையாளங்களால், அதாவது விசுவாசத்தினால் அறியப்படலாம்;[7] அவர்கள் ஒரே இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளும்போது,[8] அவர்களுடைய பாவத்தை ஒதுக்கி வைத்து நீதியைப் பின்பற்றுகிறார்கள்,[9] மெய்யான தேவனையும் அவர்களுக்கு அடுத்து இருப்பவர்களையும் அன்பு செய்கிறார்கள்; வலதுபக்கமோ அல்லது இடதுபக்கமோ சாயாமல், மாம்சத்தையும் அதன் கிரியைகளையும் சிலுவையில் அறைகிறார்கள்.[10] ஆனால் அவர்களுக்குள்ளாக எந்தவொரு பெரிதான மாம்ச பெலவீனங்கள் இல்லை என்பது போல் இதனை புரிந்து கொள்ளக்கூடாது;

அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அவைகளுக்கு எதிராகப் போராடுகிறார்கள்;[11] நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம், மரணம், பாடுகள் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றில் தொடர்ந்து தஞ்சமடைகிறார்கள், அவரிடத்தில் பற்றும் விசுவாசத்தின் மூலம் அவர்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெறுகிறார்கள்.[12]

போலியான சபையைப் பொறுத்தவரை, அவள் தேவனுடைய வார்த்தையை விட தனக்கும் தன் சட்டத்திட்டங்களுக்கும் அதிக வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுக்கிறாள்,[13] கிறிஸ்துவின் நுகத்தை ஏற்பதற்கு தன்னைத் தாழ்த்தமாட்டாள்;[14] கிறிஸ்துவால் அவருடைய வார்த்தையில் நியமிக்கப்பட்ட சாக்கிரமெந்துகளை அவள் அனுசரிக்கமாட்டாள், ஆனால் அவள் சரியானதை நினைப்பது போல் அவருடைய வார்த்தையோடு சேர்த்தும் அதிலிருந்து எடுத்தும் நிர்வகிக்கிறாள்; கிறிஸ்துவை விட மனிதர்களை அவள் அதிகம் நம்புகிறாள்; தேவனுடைய வார்த்தையின்படி பரிசுத்தமாக வாழ்பவர்களையும்,[15] அவளுடைய பிழைகள், பேராசை மற்றும் விக்கிரகாராதனை ஆகியவற்றிற்காக அவளைக் கடிந்துகொள்ளுகிறவர்களையும் அவள் துன்புறுத்துகிறாள்.[16] இந்த இரண்டு சபைகளும் ஒன்றிலிருந்து ஒன்று எளிதில் அறியப்பட்டு, ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.

1 **மத்** 13:22; 2 **தீமோ** 2:18-20; **ரோமர்** 9:6
2 **யோவான்** 10:27; **எபே** 2:20; **அப்** 17:11-12; **கொலோ** 1:23; **யோவான்** 8:47
3 **மத்** 28:19; **லூக்** 22:19; 1 **கொரி** 11:23
4 **மத்** 18:15-18; 2 **தெச** 3:14-15
5 **மத்** 28:2; **கலா** 1:6-8
6 **எபே** 1:22-23; **யோவான்** 10:4-5, 14
7 **எபே** 1:13; **யோவான்** 17:20
8 1 **யோவான்** 4:2
9 1 **யோவான்** 3:8-10
10 **ரோமர்** 6:2; **கலா** 5:24
11 **ரோமர்** 7:6, 17; **கலா** 5:17
12 **கொலோ** 1:14
13 **கொலோ** 2:18-19
14 **சங்** 2:3
15 **வெளி** 12:4; **யோவான்** 16:2
16 **வெளி** 17:3, 4, 6

## அதிகாரம் 30

## சபை ஆளுகையும் அதன் அலுவல்களும்

இந்த மெய்யான திருச்சபையானது நம்முடைய தேவன் அவருடைய வார்த்தையில் நமக்குக் கற்பித்த ஆவிக்குரியக் கொள்கையால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அதாவது, தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கும், திருநியமங்களை நிர்வகிப்பதற்கும் சபையில் போதகர்கள் இருக்க வேண்டும்;[1] போதகர்களுடன் சேர்ந்து திருச்சபையின் ஆலோசனை மன்றத்தை உருவாக்கும் மூப்பர்களும், உதவிக்காரர்களும் இருக்கவேண்டும்.[2] இதன் மூலம் மெய்யான மதம் பேணி பாதுகாக்கப்படுகிறது, எல்லா இடங்களிலும் உண்மையான சத்தியங்கள் பிரகடனம் செய்யப்படுகிறது, அதேபோல் பாவம் செய்து மீறுபவர்கள் ஆவிக்குரிய வழிமுறைகளால் தண்டிக்கப்பட்டு, பாவம் செய்வதிலிருந்து கட்டுப்படுத்தப்படுகிறார்கள்;[3] அதுமட்டுமல்லாமல், ஏழைகளும், துன்பப்படுகிறவர்களும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப நிம்மதியும் ஆறுதலும் பெறலாம். புனித பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் பரிந்துரைக்கப்பட்ட விதிகளின்படி[4] சபை நிர்வாகத்திற்கென்று உண்மையுள்ள மனிதர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது, இவை அனைத்தும் நல்ல ஒழுக்கத்துடனும் கண்ணியத்துடனும் திருச்சபையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

[1] **எபே** 4:13; 1 **கொரி** 4:1-2; 2 **கொரி** 5:20; **யோவான்** 20:23; **அப்** 26:17-18; **லூக்** 10:16

[2] **அப்** 6:3; 14:23

[3] **மத்** 18:17; 1 **கொரி** 5:4-5

[4] 1 **தீமோ** 3:1; **தீத்** 1:5

---

## அதிகாரம் 31

## போதகர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள்

தேவனுடைய வார்த்தையின் ஊழியர்களும் (போதகர்கள்),[1] மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களும்[2] தங்கள் பணிகளுக்கென்று சபையின் முறையான தேர்தலினாலும், கர்த்தருடைய நாமத்தினாலே ஜெபத்தினாலும், தேவனுடைய வார்த்தை கற்பிப்பதைப் போல நல்ல ஒழுங்கிலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆகையால், ஒவ்வொருவரும் தங்களை அநாகரீகமாக முறையற்ற வழிகளில் இந்தப் பணிகளுக்குள்ளாக நுழைக்காமல் கவனமாக இருந்து, ஒருவருடைய அழைப்பைக் குறித்த சாட்சியைப் பெறவும்,

அந்த சாட்சியானது தேவனுடையது என்பதைப் பற்றி உறுதிப்படுத்தப்படவும், நிச்சயமாக்கப்படும்படியாகவும் தேவன் ஒருவரை அழைக்கப் பிரியம்கொள்ளும்வரை காத்திருக்கவேண்டும்.[3]

தேவனுடைய வார்த்தையின் ஊழியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அனைவரும் ஒரே உலகளாவிய கண்காணியாகவும், திருச்சபையின் ஒரே தலையாகவும் இருக்கக்கூடிய[4] கிறிஸ்துவின் ஊழியர்களாக இருப்பதால்,[5] அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு ஒரே ஆற்றலும் அதிகாரமும் உண்டு.

மேலும், தேவனுடைய இந்த பரிசுத்தமான கட்டளையானது மீறப்படவோ அல்லது அதன் தரம் குறைக்கப்படவோ கூடாது. ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையின் ஊழியர்களையும் திருச்சபையின் மூப்பர்களையும் அவர்களது பணிகளின் பொருட்டு மிகவும் மதிக்க வேண்டும். மேலும் முறுமுறுப்பும், விவாதமும், சண்டையுமில்லாமல் அவர்களுடன் முடிந்தவரை சமாதானமாக இருக்கவேண்டும்[6] என்று நாங்கள் கூறுகிறோம்.

[1] 1 **தீமோ** 5:22

[2] **அப்** 6:3

[3] **எரே** 23:21; **எபி** 5:4; **அப்** 1:23-25; 13:2

[4] 1 **பேது** 2:25; 5:4; **ஏசா** 61:1; **எபே** 1:22; **கொலோ** 1:18

[5] 1 **கொரி** 4:1; 3:9; 2 **கொரி** 5:20; **அப்** 26: 16-17

[6] 1 **தெச** 5:12, 13; 1 **தீமோ** 5:17; **எபி** 13:17

---

## **அதிகாரம்** 32

## திருச்சபையின் ஒழுங்கு மற்றும் ஒழுக்கம்

இதற்கிடையில், திருச்சபையின் ஆட்சியாளர்களாக இருப்பவர்கள், திருச்சபையின் அமைப்பைப் பராமரிப்பதற்காக தங்களுக்குள் சில சட்டத்திட்டங்களை நிறுவுவது பயனுள்ளதாகவும், நன்மைபயக்கக்கூடியதாகவும் இருந்தாலும், நம்முடைய ஒரே எஜமானராகிய கிறிஸ்து நிறுவியவற்றிலிருந்து அவைகள் விலகாமல் பார்த்துக் கொள்ள அவர்கள் அதிக சிரத்தையோடு இருக்க வேண்டும்[1] என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆகையால், தேவனுடைய ஆராதனையில், நம்முடைய மனசாட்சியை எந்தவகையிலும் பிணைக்கவும் கட்டாயப்படுத்தவும் முயலுகின்ற எல்லா மனித கண்டுபிடிப்புகளையும், அவன் அறிமுகப்படுத்தும் அனைத்து சட்டதிட்டங்களையும் நாங்கள் நிராகரிக்கிறோம்.[2]

ஆகவே, இசைவையும், ஒற்றுமையையும் வளர்ப்பதற்கும் பேணிப்பாதுகாப்பதற்கும், எல்லா மனிதர்களையும் தேவனுக்குக் கீழ்ப்படியச்

செய்யும் காரியங்களை மட்டுமே நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்த நோக்கத்திற்காக, தேவனுடைய வார்த்தையின்படி, சபையை விட்டு நீக்குவதும் அல்லது சபை ஒழுங்கு நடவடிக்கையும் அதனோடு பல சூழ்நிலைகள் அடங்கிய நிலையில் அவசியமாகிறது.[3]

[1] **கொலோ** 2:6-7

[2] 1 **கொரி** 7:23; **மத்** 15:9; **ஏசா** 29:13; **கலா** 5:1; **ரோமர்** 16:17-18

3 **மத்** 18:17; 1 **கொரி** 5:5; 1 **தீமோ** 1:20

---

**அதிகாரம்** 33

**திருநியமங்கள் (சாக்கிரமெந்துகள்)**

நம்முடைய கிருபையுள்ள தேவன், நம்முடைய பலவீனம் மற்றும் இயலாமைகளின் பொருட்டு, அவருடைய வாக்குறுதிகளை நமக்குள் முத்திரையிடும்படியாகவும்,[1] நல்ல விருப்பங்களையும் கிருபையையும் நம்மீது வைக்கும்படியாகவும், நம்முடைய விசுவாசத்தை வளர்ப்பதற்கும் நிலைநிறுத்துவதற்கும் நமக்காக திருநியமங்களை நியமித்துள்ளார் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். தேவன் தம்முடைய வார்த்தையால் நமக்குள் எதை அடையாளப்படுத்துகிறார் என்பதையும், நம்முடைய உள்ளான இருதயங்களிலே அவர் என்ன செய்கிறார் என்பதையும் நம்முடைய வெளிப்புறமான உணர்வுகளுக்கு சிறப்பாக குறித்துக் காட்டுவதற்கு அவர் இவற்றை தம்முடைய சுவிசேஷத்தின் வார்த்தையோடு இணைத்துள்ளார். இதன் மூலமாக அவர் நமக்குள் அளிக்கும் இரட்சிப்பை உறுதிசெய்து நிச்சயப்படுத்துகிறார். ஏனென்றால் அவை பரிசுத்த ஆவியின் வல்லமையால் தேவன் நமக்குள் கிரியைசெய்வதற்கு பயன்படுத்துகிற, உள்ளார்ந்த மற்றும் கண்களுக்குப் புலப்படாத ஒரு காரியத்தின், புலப்படும் அடையாளங்கள் மற்றும் முத்திரைகளாக இருக்கின்றன. ஆகவே, இந்த அடையாளங்கள் நம்மை ஏமாற்றும் வகையில் வீணானதோ அல்லது முக்கியமற்றதோ இல்லை. ஏனென்றால் அவைகளின் பொருளாக கிறிஸ்து இருக்கின்றார். அவர் இல்லாமல் அவைகள் ஒன்றுமில்லை.[2]

மேலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து நிறுவிய திருநியமங்களின் எண்ணிக்கையில் நாங்கள் திருப்தி அடைகிறோம், அவைகள் இரண்டு மட்டுமே, அதாவது, திருநியமங்களாகிய ஞானஸ்நானம் மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இராப்போஜனம்.[3]

[1] **ரோமர்** 4:11; **ஆதி** 9:13; 17:11

[2] **கொலோ** 2:11, 17; 1 **கொரி** 5:7

[3] மத் 26:26-27; 28:19

---

## அதிகாரம் 34

## பரிசுத்த ஞானஸ்நானம்

நியாயப்பிரமாணத்தின் முடிவான இயேசு கிறிஸ்து,[1] அவருடைய இரத்தம் சிந்தப்படுவதன் மூலமாக, பாவத்திற்கான ஒரு பரிகாரமாகவோ அல்லது திருப்தி ஏற்படுத்தவோ மனிதர்களால் செய்யக்கூடிய அல்லது செய்யப்படும் மற்ற எல்லா இரத்தம் சிந்துதல்களுக்கும் ஒரு முடிவை ஏற்படுத்தியுள்ளார் என்று நாங்கள் விசுவாசித்து அறிக்கையிடுகிறோம். மேலும், அவர் இரத்தத்தினால் செய்யப்பட்ட விருத்தசேதனத்தை ஒழித்துவிட்டு, அதற்கு பதிலாக ஞானஸ்நானம் என்ற திருநியமத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.[2] தேவனுடைய முத்திரையையும் அடையாளத்தையும் சுமக்கும் நாம், அவருக்கு முழுவதுமாக சொந்தமானவர்களாகும்படியாகவும், அதினால் அவர் என்றென்றைக்கும் நம்முடைய கிருபையுள்ள தேவனாகவும் பிதாவாகவும் நமக்கு இருப்பார் என்றும் சாட்சி பகரும்படியாகவும், இதன் மூலம், நாம் தேவனுடைய திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மற்ற எல்லா மக்களிடமிருந்தும், அந்நியமான மதங்களிலிருந்தும் பிரிக்கப்படுகிறோம்.

ஆகையால், தம்முடையவர்கள் அனைவரையும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பெயரால் தூய்மையான நீரில் ஞானஸ்நானம் பெறும்படி அவர் கட்டளையிட்டிருக்கிறார்.[3] இதன் மூலம் நீரானது ஞானஸ்நானம் எடுக்கிறவர்களின் மீது ஊற்றப்படும்போது உடலிலுள்ள அசுத்தத்தை அது கழுவுவதைப்போல, கிறிஸ்துவினுடைய இரத்தமானது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், உள்ளார்ந்த ரீதியில் ஆத்துமாவில் தெளிக்கப்பட்டு, அதன் பாவங்களிலிருந்து அதைக் கழுவி, கோபாக்கினையின் பிள்ளைகளாக இருப்பதிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாக நம்மை மறுபிறப்படையச் செய்கிறது[4] என்பதை இது அடையாளப்படுத்துகிறது. இது வெளிப்புறத்தில் தெளிக்கப்படுகிற நீரால் நடைபெறாமல், சாத்தானாகிய பார்வோனுடைய கொடுங்கோன்மையிலிருந்து தப்பித்து, ஆவிக்குரிய கானான் தேசத்திற்குள்ளாக பிரவேசிப்பதற்கு, நாம் கண்டிப்பாக கடந்து செல்ல வேண்டிய நம்முடைய செங்கடலாகிய தேவனுடைய குமாரனின் விலைமதிப்பற்ற இரத்தம் தெளிக்கப்படுவதன் மூலமாகவே[5] நடந்தேறுகிறது.

ஆகையால், போதகர்கள் தங்களது பங்களிப்பாக திருநியமத்தையும் காணக்கூடியவற்றையும் நிர்வகிக்கிறார்கள்,[6] ஆனால் நம்முடைய கர்த்தர் அந்த திருநியமத்தினால் அடையாளப்படுத்தப்படுவது எதுவோ அதைக் கொடுக்கிறார்.

அவைகள் அவருடைய ஈவுகளும், கண்ணுக்குப் புலப்படாததுமாகிய கிருபையுமாம். அவைகள் சகல அசுத்தத்தையும் அநீதியையும் கொண்ட நம்முடைய ஆத்துமாக்களைக் கழுவி, சுத்தமாக்கி, பரிசுத்தப்படுகிறது;[7] நம்முடைய இருதயங்களை புதுப்பித்து, அவற்றை எல்லா ஆறுதலினாலும் நிரப்பி, தகப்பனுடைய நன்மைகளினால் மெய்யான நிச்சயத்தை நமக்கு அருளிச் செய்கிறது; நமக்குள்ளாக புதிய மனுஷனை தரிப்பித்து, பழைய மனுஷனையும் மற்றும் அவனது கிரியைகளையும் அகற்றிப்போடுகிறது.[8]

ஆகவே, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த வாஞ்சையுள்ள ஒவ்வொரு மனிதனும், இந்த ஒரே ஞானஸ்நானத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். நாம் இருமுறை பிறக்கமுடியாது என்பதால், ஞானஸ்நானமும் மீண்டும் திரும்ப செய்யப்படக்கூடாது.[9] தண்ணீர் நம்மீது ஊற்றப்படும்போதும், அதை நாம் பெற்றுக்கொள்ளும்போதும் மட்டும் இது நமக்கு பிரயோஜனமாயிராமல், நம்முடைய வாழ்நாள் முழுவதும் பிரயோஜனமளிக்கக் கூடியதாய் இருக்கிறது.[10]

ஆகவே, தாங்கள் ஒருமுறை பெற்ற ஒரே ஞானஸ்நானத்தில் திருப்தியடையாத மறு ஞானஸ்நானக் கோட்பாட்டாளர்களாகிய அனபாப்டிஸ்டுகளின் பிழையையும், அதுமட்டுமல்லாமல் விசுவாசிகளுடைய குழந்தைகளின் ஞானஸ்நானத்தை அவர்கள் கண்டிப்பதையும் நாங்கள் வெறுக்கிறோம். ஏனென்றால் நம்முடைய குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட அதே வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் இஸ்ரவேலர்களுடைய சிறு குழந்தைகள் விருத்தசேதனம் செய்யப்பட்டதைப்போல,[11] நம்முடைய குழந்தைகளும் உடன்படிக்கையின் அடையாளத்திற்குள்ளாக ஞானஸ்நானம் அளிக்கப்பட்டு முத்திரையிடப்பட வேண்டும்[12] என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

உண்மையில், கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை வயது வந்தவர்களை கழுவுவதற்கு சிந்தினதைக் காட்டிலும் எவ்வளவும் குறைவாக விசுவாசிகளுடைய குழந்தைகளுக்கென்று சிந்தவில்லை.[13] ஆகையால், கிறிஸ்து அவர்களுக்காகச் செய்தவற்றின் அடையாளத்தையும், திருநியமத்தையும் அவர்கள் பெற வேண்டும்; மேலும் தேவன் நியாயப்பிரமாணத்தில் கட்டளையிட்டதைப் போல, குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களுக்காக ஒரு ஆட்டை பலியாக செலுத்தி, இயேசு கிறிஸ்துவின் திருநியமமாகிய அவருடைய பாடுகள் மற்றும் மரணத்தின் திருநியமத்தில் அக்குழந்தைகள் பிறந்த சில நாட்களில் பங்குகொள்ளச் செய்ய வேண்டும்.[14] மேலும், யூத மக்களுக்கு விருத்தசேதனம் செய்ததை, ஞானஸ்நானம் நம் குழந்தைகளுக்கு செய்கிறது. இந்த காரணத்திற்காகவே பவுல் ஞானஸ்நானத்தை கிறிஸ்துவின் விருத்தசேதனம் என்று அழைக்கிறார்.[15]

[1] ரோமர் 10:4

[2] கொலோ 2:11-12; 1 பேது 3:21; 1 கொரி 10:2

[3] மத் 28:19

[4] 1 கொரி 6:11; தீத் 3:5; எபி 9:14; 1 யோவான் 1:7; வெளி 1:6

[5] யோவான் 19:34

[6] மத் 3:11; 1 கொரி 3:5, 7; ரோமர் 6:3

[7] எபே 5:26; அப் 22:16; 1 பேது 3:21

[8] கலா 3:27; 1 கொரி 12:13; எபே 4:22-24

[9] மாற் 16:16; மத் 28:19; எபே 4:5; எபி 6:2

[10] அப் 2:38; 8:16

[11] ஆதி 17:11-12

[12] மத் 19:14; 1 கொரி 7:14

[13] கொலோ 2:11-12

[14] யோவான் 1:29; லேவி 12:6

[15] கொலோ 2:11

---

## அதிகாரம் 35

## நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இராப்போஜனம்

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அவர் ஏற்கனவே மறுப்பிறப்படையச் செய்து, அவருடைய குடும்பமாகிய சபையில் எவர்களை இணைத்துக் கொண்டாரோ, அவர்களை வளர்ப்பதற்கும் ஆதரிப்பதற்கும் பரிசுத்த இராப்போஜனத்தின் திருநியமத்தை ஏற்படுத்தினார்[1] என்பதை நாங்கள் விசுவாசித்து அறிக்கையிடுகிறோம்.

இப்போது மறுபடியும் பிறப்பிக்கப்பட்டவர்கள் தங்களுக்குள்ளாக இரண்டு வாழ்க்கையைக் கொண்டிருக்கின்றனர்:[2] ஒன்று, மாம்சம் சம்பந்தப்பட்டதும் தற்காலிகமானதுமாய் இருக்கிறது. இதை அவர்கள் அவர்களுடைய முதல் பிறப்பிலிருந்தே கொண்டிருக்கிறார்கள். அது எல்லா மனிதருக்கும் பொதுவானது. இன்னொன்று, ஆவிக்குரியதும் பரலோகம் சம்பந்தப்பட்டதுமாய் இருக்கிறது. இது அவர்களுக்கு இரண்டாவது பிறப்பாகிய மறுபிறப்பில் கொடுக்கப்படுகிறது;[3] அது சுவிசேஷத்தின் வார்த்தையினால்[4] கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியத்தில் அவர்களுக்குள் பலிதமாகிறது. இந்த வாழ்வானது எல்லாருக்கும் பொதுவானதல்ல, ஆனால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு இது பிரத்தியேகமானது.[5] அதேபோல, மாம்சீக மற்றும் பூமிக்குரிய வாழ்க்கையை ஆதரிப்பதற்காக, தேவன் பூமிக்குரிய மற்றும் பொதுவான அப்பத்தை நமக்குத்

தந்துள்ளார். அது நமக்குப் பணிவிடை செய்து, வாழ்க்கையைப் போலவே எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதாக இருக்கிறது. ஆனால் விசுவாசிகள் கொண்டிருக்கும் ஆவிக்குரிய மற்றும் பரலோக வாழ்க்கையின் ஆதரவிற்காக, அவர் பரலோகத்திலிருந்து இறங்கிய ஒரு ஜீவ அப்பத்தை அனுப்பியுள்ளார், அவர்தான் இயேசு கிறிஸ்து.[6] விசுவாசிகள் அவரை உட்கொள்ளும்போது, அதாவது ஆவிக்குரிய விசுவாசத்தினால் அவரை பெற்றுக்கொண்டு, தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும்போது, கிறிஸ்து அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை வளர்த்து பலப்படுத்துகிறார். [7]

கிறிஸ்து, இந்த ஆவிக்குரிய மற்றும் பரலோக அப்பத்தை நமக்கு பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக, பூமிக்குரிய மற்றும் கண்களுக்குப் புலப்படக்கூடிய அப்பத்தை அவருடைய மாம்சத்தின் திருநியமமாகவும், திராட்ச இரசத்தை அவருடைய இரத்தத்தின் திருநியமமாகவும்[8] நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார். இந்த திருநியமத்தை நாம் பெற்று நம்முடைய கரங்களில் வைத்துக்கொண்டு, அதை நம்முடைய வாய்களினால் உட்கொண்டும் பருகும்போது, நம்முடைய வாழ்க்கைக்கு மெய்யான ஆதாரம் கிடைப்பதைப்போல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் மெய்யான ஆதாரத்திற்காக, நம்முடைய ஆத்துமாக்களிலுள்ள ஒரே இரட்சகராகிய கிறிஸ்துவின் மெய்யான சரீத்தையும் இரத்தத்தையும் விசுவாசத்தின் மூலமாக (அது நம்முடைய ஆத்துமாவின் வாயாகவும், கரமாகவும் இருக்கிறது) நாம் நிச்சயமாக பெற்றுக்கொள்கிறோம்[9] என்பதை நமக்கு சாட்சிபகரும் படியாக கிறிஸ்து இதைச் செய்தார்.

இயேசு கிறிஸ்து தம்முடைய திருநியமங்களை பயன்படுத்துவதை வீணாக நமக்கு கட்டளையிடவில்லை என்பது உறுதியாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாமலும் இருப்பதைப்போல, பரிசுத்த ஆவியானவருடைய செயல்பாடுகள் மறைக்கப்பட்டும் புரிந்துகொள்ள இயலாததாகவும் இருக்கிறபடியினால், இந்த திருநியமத்தின் செயல்முறையானது நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு மேலானதாகவும், நம்மால் விளங்கிக்கொள்ள முடியாததாகவும் இருந்தபோதும், இந்த பரிசுத்த அடையாளங்களால் கிறிஸ்து நமக்கு பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்தையும் அவர் நம்மில் செய்கிறார் என்பதும் உறுதியாக இருக்கிறது. அதேநேரத்தில் நம்மால் உண்ணப்பட்டு, பானம்பண்ணப்படுகிறது கிறிஸ்துவின் மெய்யான சொந்த சரீரமாகவும், அவருடைய மெய்யான சொந்த இரத்தமாகவும் இருக்கிறது என்று நாம் கூறுவது பிழையாகாது.[10] ஆனால் நாம் அதில் பங்குகொள்ளும் விதமோ வாயினால் அல்ல, மாறாக ஆவியானால் விசுவாசத்தின் மூலம் பங்குகொள்ளுகிறோம். ஆகவே, கிறிஸ்து எப்பொழுதும் பரலோகத்தில் தன் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருந்தாலும்,[11] விசுவாசத்தினாலே அவரில் நம்மைப் பங்காளிகளாக்குவதை அவர் நிறுத்திக்கொள்வதில்லை. இந்த

விருந்தானது கிறிஸ்து தம்முடைய எல்லா நன்மைகளையும் நமக்குத் தந்தருளுகின்ற ஒரு ஆவிக்குரிய பந்தியாக இருக்கிறது. நாம் அவரையும், அவருடைய பாடுகள் மற்றும் மரணத்தின் பலன்களை அனுபவிக்க[12] தம்மை அதில் நமக்குத் தருகிறார். மேலும், நம்முடைய ஆறுதலற்ற ஆத்துமாவிற்கு அவருடைய மாம்சத்தை உட்கொள்ளுவதின் மூலமாக வளர்ச்சியூட்டி, பலப்படுத்தி ஆறுதலளிக்கிறார். அவருடைய இரத்தத்தில் பானம்பண்ணுவதின் மூலம் அவைகளை விடுவித்து புதுப்பிக்கிறார்.[13]

மேலும், திருநியமங்கள், அவை எவற்றை அடையாளப்படுத்துகிறதோ, அவற்றோடு இணைக்கப்பட்டிருந்தாலும், அவை இரண்டுமே எல்லா மனிதர்களாலும் பெறப்படுவதில்லை; தேவபக்தியற்றவன் ஆக்கினைத்தீர்ப்படையவே அதனை பெற்றுக்கொள்கின்றான்,[14] ஆனால் திருநியமத்தின் சத்தியத்தைப் பெற்றுக்கொள்வதில்லை. யூதாசும், மந்திரவாதியான சீமோன் ஆகிய இருவரும் மெய்யாகவே திருநியமத்தைப் பெற்றுக்கொண்டனர், ஆனால் அது அடையாளப்படுத்திய கிறிஸ்துவை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்துவினால் விசுவாசிகள் மட்டுமே அதில் பங்குதாரர்கள் ஆகிறார்கள்.

இறுதியாக, இந்த பரிசுத்த திருநியமத்தை தேவனுடைய மக்களின் சபைக்கூடிவருதலில் மனத்தாழ்மையுடனும் பயபக்தியுடனும் நாம் பெறுகிறோம்.[15] நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவின் மரணத்தின் ஒரு பரிசுத்த நினைவுகூறுதலாக இதை நம்மிடையே வைத்துக் கொண்டு, நன்றி நிறைந்த உள்ளத்தோடு நம்முடைய விசுவாசத்தையும் கிறிஸ்தவ மதத்தையும் அறிக்கையிடுகிறோம். ஆகவே, முற்கூட்டியே தன்னை சரியாக ஆராய்ந்து பார்க்காமல் யாரும் இந்த மேஜைக்கு வரக்கூடாது; இல்லையென்றால், இந்த அப்பத்தை சாப்பிடுவதன் மூலமும், இந்த பாத்திரத்தில் பானம்பண்ணுவதன் மூலமும் அவர் தனக்குத்தானே நியாயத்தீர்ப்பை உண்டு குடிக்கிறார்.[16] சுருக்கமாகச் சொல்லப் போனால், இந்த பரிசுத்த திருநியமத்தை ஆசரிப்பதின் மூலம் நாம் தேவனையும் நம் அண்டையில் இருக்கிறவர்களையும் மிகுந்த அன்பு செலுத்துமாறு உந்தித் தள்ளப்படுகிறோம்.

ஆகவே திருநியமங்களோடு மனிதன் சேர்த்து வைத்திருக்கிற குழப்பங்களையும், கண்டிக்கத்தக்க கண்டுபிடிப்புகளையும், அவற்றோடு அவன் கலந்து வைத்திருக்கிற அவதூறான காரியங்களையும் நாங்கள் நிராகரிக்கிறோம். மேலும், கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் நமக்குக் கற்பித்த கட்டளைகளில் நாம் திருப்தியடைய வேண்டும் என்பதையும், திருநியமங்களைக் குறித்து அவர்கள் பேசியதைப் போலவே நாமும் பேச வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்துகிறோம்.

[1] மத் 26:26; மாற் 14:22; லூக் 22:19; 1 கொரி 11:23-25
[2] யோவான் 3:6
[3] யோவான் 3:5
[4] யோவான் 5:24, 25
[5] 1 யோவான் 5:12; யோவான் 10:28
[6] யோவான் 6:32-33, 51
[7] யோவான் 6:63
[8] மாற்கு 14:22-24
[9] 1 கொரி 10:16-17; எபே 3:17; யோவான் 6:35
[10] யோவான் 6:55-56; 1 கொரி 10:16
[11] அப் 3:21; மாற் 16:19; மத் 26:11
[12] மத் 26:26; லூக் 22:19-20; 1 கொரி 10:2-4
[13] ஏசா 55:2; ரோமர் 8:22-23
[14] 1 கொரி 10:29; 2 கொரி 6:14-15; 1 கொரி 2:14
[15] அப் 2:42; 20:7
[16] 1 கொரி 11:27-28

---

## அதிகாரம் 36

## குடிமக்களை ஆளுகிறவர்கள்

நம்முடைய கிருபையுள்ள தேவன், மனிதகுலத்தின் சீரழிவின் காரணமாக, உலகமானது சில சட்டங்கள் மற்றும் கொள்கைகளினால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற சித்தத்துடன், மனிதனுடைய அக்கிரமம் கட்டுப்படுத்தப்படவும் மனிதர்களுக்கிடையே எல்லாக் காரியங்களும் நல்ல ஒழுங்கில் நடத்தப்படவும் ராஜாக்களையும், இளவரசர்களையும், ஆளுநர்களையும் நியமித்துள்ளார்[1] என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அந்த நோக்கத்திற்காக, தீங்கு செய்பவர்களைத் தண்டிப்பதற்கும், நன்மை செய்பவர்களின் புகழுக்காகவும் தேவன் வாளை அரசாங்கத்தின் கைகளில் வைத்துள்ளார். அவர்களது பணியானது குடிமக்கள் அரசின் நலனைக் கவனிப்பது மற்றும் பேணிகாப்பதோடு மட்டுமல்லாமல், பரிசுத்தமான ஊழியத்தை பாதுகாக்கவும், இதனால் அனைத்து விக்கிரகாராதனை மற்றும் பொய்யான வழிபாடுகளையும் அகற்றி தடுக்கவும் வேண்டும்;[2]* அந்திக் கிறிஸ்துவின் ராஜ்ஜியம் இவ்வாறு அழிக்கப்பட்டு கிறிஸ்துவின் ராஜ்யம் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆகவே, தேவன் தன்னுடைய வார்த்தையில் கட்டளையிட்டுள்ளபடி, அவர் எல்லாராலும் கனமடையவும், ஆராதிக்கப்படவும், சுவிசேஷத்தினுடைய வார்த்தை எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கப்படுவதை அவர்கள் அனுமதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், குடிமக்களின் அரசிற்கு ஒருவன் எந்த சூழ்நிலையில், தரத்தில் அல்லது நிலைமையில் இருந்தாலும், ஒவ்வொருவரும் அரசாளுகிறவர்களுக்குத் தங்களை உட்படுத்துவது அவர்களது பெரிய கடமையாகும்.[3] அவர்களுக்கு கனம் செலுத்துவதும்,[4] மரியாதையையும், கண்ணியத்தையும் காட்டுவதும், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக இல்லாத எல்லாக் காரியங்களிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிவதும் அவசியம்;[5] ஒவ்வொருவரும் தங்களுடைய ஜெபங்களில், அவர்களுடைய எல்லா வழிகளிலும் தேவன் அவர்களை ஆளுகை செய்து வழிநடத்துவதற்கும், அதினால் நாம் எல்லா தேவபக்தியுடனும் நேர்மையுடனும், ஒரு அமைதியான மற்றும் சமாதானமான வாழ்க்கையை வாழுவதற்கும் அவர்களுக்காக விண்ணப்பம் செய்யவேண்டும். [6]

ஆகையால், உயர் அதிகாரங்களையும் நீதிமன்றங்களையும் நிராகரித்து, நீதியைக் கவிழ்த்துப்போடும்[7] மறு ஞானஸ்நானக் கோட்பாட்டாளர்களாகிய அனபாப்டிஸ்டுகள் மற்றும் அதிகாரங்களை நிராகரிக்கும் பிற தேசத்துரோக மக்களின் பிழையை நாங்கள் வெறுக்கிறோம். இவர்கள் பொருட்களின் பொதுவான உரிமையை அறிமுகப்படுத்துவதன் மூலம், மனிதர்களிடையே தேவன் ஏற்படுத்தியிருக்கும் தார்மீக ஒழுங்கை சிதைக்கின்றனர்.[8]

**குறிப்பு**: *இந்த சொற்றொடரானது, திருச்சபையுடனான குடிமக்களின் அரசின் தொடர்பை ஏற்கனவே நிறுவப்பட்ட சபையின் கொள்கைகளின் அடிப்படையில் தொடர்கிறது. இது முதன்முதலாக கான்ஸ்டன்டைன் அரசனினால் நடைமுறைப்படுத்தப்பட்டு, பின்னர் அநேக புரொட்டஸ்டண்ட் தேசங்களில் பின்பற்றப்பட்டது. ஆயினும், திருச்சபையின் மீது அரசின் ஆதிக்கத்தின் கொள்கையை வரலாறு ஆதரிக்கவில்லை, மாறாக அது திருச்சபையையும் அரசையும் பிரிக்கிறது. மேலும், திருச்சபையை தன்னிச்சையாக சீர்திருத்துவதற்கான அதிகாரத்தை அரசு தன்னில் கொண்டிருப்பதும், திருச்சபையானது நாட்டின் அரசிலிருந்து வேறுபட்ட ஆட்சியமைப்பைக் கொண்டது என்பதின் அடிப்படையில், திருச்சபையினுடைய சொந்த விவகாரங்களை சுயாதீனமாக நடத்துவதற்கான உரிமையை அதற்கு மறுப்பதும் புதிய தேவனுடைய ஆட்சி முறைக்கு எதிரானது. புதிய ஏற்பாடு கிறிஸ்தவ திருச்சபையை அரசியல் நடவடிக்கைகளால் நிர்வகிக்கப்பட வேண்டுமென்றும், அதினால் வளர்க்கப்பட வேண்டுமென்றும் சபையை அரசின் அதிகாரத்திற்கு உட்படுத்தவில்லை. மாறாக நம்முடைய தேவனும் ராஜாவுமாகிய அவருக்கு மட்டுமே கீழ்ப்படுத்தப்பட்டு, ஆவிக்குரிய ஆயுதங்களால் மட்டுமே அதன் அலுவலர்களால் ஆட்சிசெய்யப்பட்டு, மேம்படுத்தப்படும் படியாக, ஒரு தனி சுயாதீன பிரதேசமாகவும், நாட்டின் ஆளுகையிலிருந்து முற்றிலும் சுயாதீனமானதாகவும் திருச்சபை இருக்கிறது. நடைமுறையில் அனைத்து

சீர்திருத்த திருச்சபைகளும் நிறுவப்பட்ட திருச்சபையின் கருத்தை நிராகரித்தன, மேலும் திருச்சபைகளின் சுயாட்சி மற்றும் தேவனுடைய ஊழியம் தொடர்பான விஷயங்களில் மனசாட்சியின் தனிப்பட்ட சுதந்திரத்தை ஆதரித்து அதற்கென்று வழக்காடுகின்றன.

"அமெரிக்காவிலுள்ள கிறிஸ்தவ சீர்திருத்த சபையானது *(The Christian Reformed Church in America)* இந்தக் கருத்தோடு முழுமையாக இசைந்து, பின்வரும் அர்த்தத்தில் நாட்டின் அரசு அலுவல்களை அது கருத்தில் கொள்ளவில்லை என்று அறிவிப்பதிலிருந்து கட்டுப்படுத்தப்படுகிறது. அதாவது, ஒரு அரசு சபையை ஸ்தாபிப்பதின் மூலமாகவும், அதை பராமரிப்பதின் மூலமாகவும், அதையே ஒரே உண்மையான திருச்சபையாகப் பாவித்து, அதை முன்னேற்றவும் ஆதரிக்கவும், மற்ற எல்லா சபைகளையும் போலியான மதங்களாகக் கருதி, அவற்றை வாள் மூலம் எதிர்ப்பது, துன்புறுத்துவது மற்றும் அழிப்பது என்பதன் மூலம் மதத் துறையில் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துவது கடமையாகும். மேலும், அதன் சொந்த மதச்சார்பற்ற ஆட்சி வட்டாரத்தில், அரசிற்கு நியாயப்பிரமாணத்தின் முதல் மற்றும் இரண்டு பகுதிகளிலும் ஒரு தெய்வீக கடமை உள்ளது என்பதை அது நேர்மறையாகக் கருதுகிறது; மேலும், தேவனுடைய மற்றும் கிறிஸ்துவின் நிறுவனங்களாக அரசு மற்றும் திருச்சபை ஆகிய இவ்விரண்டும் பொதுவான சரிசம உரிமைகளையும், கடமைகளையும் கொண்டுள்ளன. எனவே அவை பிதாவிடமிருந்தும் குமாரனிடமிருந்தும் புறப்படுகிற பரிசுத்த ஆவியானவர் மூலமாகச் சந்திக்கப்பட மிகவும் புனிதமான பரஸ்பர கடமையைக் கொண்டுள்ளன. எவ்வாறாயினும், அவர்கள் ஒருவருக்கொருவர் அவர்களுடைய பிரதேசத்தை ஆக்கிரமிக்கக்கூடாது. திருச்சபையானது அதன் சொந்த துறையில் இறையாண்மையின் உரிமைகளைக் கொண்டுள்ளது. அதேபோல அரசும் அத்தகைய உரிமைகளைக் கொண்டுள்ளது" *(ACTA Synod, 1910).*

[1] **யாத்** 18:20; **ரோமர்** 13:1; **நீதி** 8:15; **எரே** 21:12; 22:2-3; **சங்** 82:1, 6; 101:2; **உபா** 1:15-16; 16:18; 17:15; **தானி** 2:21, 37; 5:18

[2] **ஏசா** 49:23, 25; 1 **இராஜா** 15:12; 2 **இராஜா** 23:2-4

[3] **தீத்** 3:1; **ரோமர்** 13:1

[4] **மாற்** 12:17; **மத்** 17:24

[5] **அப்** 4:17-19; 5:29; **ஓசி** 5:11

[6] **எரே** 29:7; 1 **தீமோ** 2:1-2

[7] 2 **பேது** 2:10

[8] **யூதா** 8, 10

## அதிகாரம் 37
## இறுதி நியாயத்தீர்ப்பு

இறுதியாக, தேவனுடைய வார்த்தையின்படி, கர்த்தரால் நியமிக்கப்பட்ட நேரம் (இது எந்த படைப்புக்கும் தெரியாது)[1] வரும்போது, தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை முடிந்ததும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உயிரோடிருக்கிறவர்கள் மற்றும் மரித்தவர்களின் நியாயாதிபதியாக[2] தன்னை அறிவிக்க மகிமையுடனும் மாட்சிமையுடனும், அவர் பரமேறியதைப் போலவே,[3] மாம்சத்தோடும், கண்களால் காணப்படக்கூடிய வகையிலும் பரலோகத்திலிருந்து இறங்கி வருவார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர் வந்து இந்த உலகத்தை சுத்திகரிக்கும் பொருட்டு,[4] நெருப்பினாலும், அக்கினி ஜுவாலையினாலும் சுட்டெரிப்பார். உலகத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை இருந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகிய எல்லா மனிதர்களும் தூதர்களின் சத்தத்தினாலும், தேவனுடைய எக்காளத்தின் தொனியினாலும் வரவழைக்கப்பட்டு,[5] தனிப்பட்ட முறையில் இந்த மகாப்பெரிய நியாயாதிபதிக்கு முன்பாக நிறுத்தப்படுவார்கள்.[6] அதற்கு முன்பே இறந்தவர்கள் அனைவரும் பூமியிலிருந்து எழுப்பப்படுவார்கள், அவர்களின் ஆத்துமாக்கள் அவர்கள் உயிரோடிருக்கும்போது கொண்டிருந்த தங்கள் சரீரங்களுடன் ஒன்றுபட்டு இணைக்கப்படும்.[7] உயிரோடிருக்கிறவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் மற்றவர்களைப் போல மரிப்பதில்லை, ஆனால் கண்ணிமைக்கும் நேரத்தில் அவர்கள் அழிவிலிருந்து அழியாமைக்கு மாற்றப்படுவார்கள்.[8]

பின்னர் புத்தகங்கள் (அதாவது, மனசாட்சி) திறக்கப்பட்டு, மரித்தவர்கள் இந்த உலகில் வாழ்ந்தபோது அவர்கள் செய்ததைப் பொறுத்து, அவைகள் நன்மையானதா அல்லது தீமையானதா என்று கண்டு, அதனடிப்படையில் தீர்ப்பளிக்கப்படுவார்கள்.[9] உண்மையில், எல்லா மக்களும் தாங்கள் பேசிய அனைத்து வீணான வார்த்தைகளுக்கும் கணக்குக் கொடுப்பார்கள், ஆனால் உலகமோ இதை ஏதோ ஒரு விளையாட்டாகவும், வேடிக்கையாகவும் பார்க்கிறது.[10] பின்னர் மனிதர்களின் அந்தரங்கங்களும் மாய்மாலமும் வெளிப்படுத்தப்பட்டு எல்லாருக்கும் முன்பாக திறக்கப்படும்.[11]

ஆகையால், இந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து எண்ணிப்பார்ப்பது, பொல்லாத மற்றும் தேவபக்தியற்றவர்களுக்கு நியாயமான முறையில் பயங்கரமானதாகவும், கோரமானதாகவும் இருக்கிறது.[12] ஆனால் நீதிமான்களுக்கும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குமோ இது மிகவும் விரும்பத்தக்கதாகவும் மற்றும் ஆறுதலளிக்ககூடியதாகவும் இருக்கிறது;

ஏனென்றால், அவர்களுடைய முழு மீட்பும் அங்கே பூரணப்படுத்தப்பட்டு, அவர்கள் உழைப்பிற்கான பலனையும், அவர்கள் சுமந்த துயரங்களுக்கான பலனையும் அங்கே பெற்றுக் கொள்வார்கள்.[13] அவர்களுடைய குற்றமின்மை அங்கே எல்லாராலும் அறியப்பட்டு, அவர்கள் உலகத்தில் வாழ்ந்தபோது அவர்களை மிகவும் உபத்திரவப்படுத்தி, ஒடுக்கி, துன்புறுத்தின[14] துன்மார்க்கர் மீது தேவன் நிறைவேற்றும் தம்முடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பை அவர்கள் காண்பார்கள்.[15] தீங்கு செய்தவர்கள் தங்கள் மனசாட்சியினால் அவர்களுடைய பாவம் மெய்ப்பிக்கப்பட்டு,[16] அழியாதவர்களாக மாற்றப்படுவார்கள் – ஆனால் அது பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட[17] நித்திய அக்கினியிலே[18] வேதனையை அனுபவிக்க மாத்திரமே.

இதற்கு மாறாக, உண்மையுள்ளவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்படுவார்கள்;[19] தேவனுடைய குமாரன் தம்முடைய பிதாவாகிய தேவனுக்கும் அவருடைய தெரிந்துகொள்ளப்பட்ட தூதர்களுக்கும் முன்பாக அவர்களுடைய நாமங்களை அறிக்கையிடுவார்.[20] அவர்களுடைய கண்ணீர் யாவும் துடைக்கப்படும்;[21] அதனுடைய காரணம், இப்போது நீதியரசர்களினாலும், அரசு அதிகாரிகளினாலும் தூஷணமானது, தீங்கு விளைவிக்கக்கூடியது என்று கண்டனம் செய்யப்படுகிறவைகள், நியாயத்தீர்ப்பில் அவைகள் யாவும் தேவனுடைய குமாரனுக்கானது என்று அறியப்படும்.[22] அதற்கு கிருபையுள்ள பலனாக, மனிதனுடைய இருதயத்தில் இப்படி ஒருபோதும் கற்பனைகூட செய்து பார்த்திருக்காத வகையில் கர்த்தர் அவர்களை மகிமைப்படுத்துவார்.[23]

ஆகவே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை முழுமையாக அனுபவிப்பதற்காக மிகுந்த ஏக்கத்துடன் அந்த மகத்தான நாளை நாங்கள் எதிர்நோக்கியிருக்கிறோம்.[24] ஆமென்.

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும் (வெளி 22:20).

[1] **மத்** 24:36; 25:13; 1 **தெச** 5:1-2; **வெளி** 6:11; **அப்** 1:7; 2 **பேது** 3:10

[2] 2 **தெச** 1:7-8; **அப்** 17:31; **மத்** 24:30; 25:31; **யூதா** 15; 1 **பேது** 4:5; 2 **தீமோ** 4:1

[3] **அப்** 1:11

[4] 2 **பேது** 3:7, 10; 2 **தெச** 1:8

[5] 1 **கொரி** 15:42; **வெளி** 20:12-13; 1 **தெச** 4:16

[6] **வெளி** 20:12-13; **அப்** 17:31; **எபி** 6:2; 9:27; 2 **கொரி** 5:10; **ரோமர்** 14:10

[7] **யோவான்** 5:28-29; 6:54; **தானி** 12:2; **யோபு** 19:26-27

[8] 1 **கொரி** 15:51-53

[9] வெளி 20:12-13; 1 கொரி 4:5; ரோமர் 14:11-12; யோபு 34:11; யோவான் 5:24; தானி 12:2; சங் 62:13; மத் 11:22; 23:33; யோவான் 5:29; ரோமர் 2:5-6; 2 கொரி 5:10; எபி 6:2; 9:27

[10] ரோமர் 2:5; யூதா 15; மத் 12:36

[11] 1 கொரி 4:5; ரோமர் 2:1-2, 16; மத் 7:1-2

[12] வெளி 6:15-16; எபி 10:27

[13] லூக் 21:28; 1 யோவான் 3:2; 4:17; வெளி 14:7; 2 தெச 1:5-7; லூக் 14:14

[14] மத் 25:46; 2 தெச 1:6-8; மல் 4:3

[15] தானி 7:26

[16] ரோமர் 2:15

[17] மல் 4:1; மத் 25:41

[18] வெளி 21:8; 2 பேது 2:9

[19] மத் 25:34; 13:43

[20] மத் 10:32

[21] ஏசா 25:8; வெளி 21:4

[22] ஏசா 66:5

[23] ஏசா 64:4; 1 கொரி 2:9

[24] எபி 10:36-38